பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை (27~07~2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:241




வன்னியில் உள்ள விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை முடித்து ஒரு தொகுதி இளநிலை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் வெளியேறினர். அவர்களில் சிறப்புப் பெறுபேறு பெற்றவர்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வழங்கினார். இந்த நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், கேணல் பானு, கேணல் சொர்ணம், கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் துறைசார்ந்த பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். நிகழ்வில் இறுதியாக பயிற்சியை முடித்துக் கொண்ட இளநிலை அதிகாரிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-9-6)

### சித்த மருத்துவத்துறையை பீடமாக்குமாறு வலியுறுத்தி

# பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் மாணவர்களால் நேற்று தடுத்துவைப்பு!

## கூட்டம் நடந்த கட்டடத்தை சிலமணிநேரம் பூட்டி வைத்தனர்

யாழ்ப்பாணம்,ஜூலை27

சித்தமருத்துவத்துறையை பீடமாக்கும் தமது கோரிக்கையை வலியுறுத்தி அந்தத்துறை மாணவர்கள் நேற்று யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களை அவர்களது கூட்டம் நடந்த கட்டடத்தைவிட்டு வெளியேற விடாமல் சிலமணி நேரம் தடுத்துவைத்தனர்.

சித்தமருத்துவத்துறையை பீடமாக்குவதற்கு மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சிபாரிசு செய்யத் தாம் நேற்று நடந்த கூட்டத்தில் முடிவுசெய்துள்ளதாக மாணவர் பிரதிநிதிகளிடம் பேரவை உறுப்பினர்கள் விளக்கியதை அடுத்தே அவர்கள் வெளியேறிச்செல்ல மாணவர்கள் அனுமதித்தனர்.

முன்னதாக, யாழ்.பல்கலைக்கழக பேரவையின் கூட்டம் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் தலைமையில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஆரம்பமானது.

கூட்டத்தில் சித்தமருத்துவத்துறை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சித்தமருத்துவத் துறையை நிறுவனமாக்கவேண்டும் என்று பேரவை கடந்த கூட்டத்தில் எடுத்த முடிவை ரத்துச் செய்யும்படியும் - துறையை பீடமாக்குவதற்கான ஏற்பாடுகளை செய்யும்படியும் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவைக் கோருவது எனவும் -

பேரவைக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

பேரவைக் கூட்டம் நடைபெறுவதையொட்டி சித்தமருத்துவத்துறை மாணவர்கள் தமது போராட்டத்தை நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒழுங்குபடுத்தியிருந்தனர். இதனால், அங்கு மாணவர்கள் பலர் கூடியிருந்தனர்.

நண்பகல் 12 மணியளவில், பேரவைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த பல்கலைக்கழகத்தின் பிரதான அலுவலகக் கட்டடத்தின் மூன்று நுழைவாயில் கதவுகளையும் மாணவர்கள் திடீரென மூடிவிட்டனர். அப்போது பேரவைக் கூட்டம் கட்டடத்தினுள் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. துணைவேந்தர் உட்பட மொத்தம் 20 பேர் உள்ளே இருந்தனர்.

தமது கோரிக்கை தொடர்பான தெளிவான முடிவைத் தரும் வரையில் தமது இந்தப் போராட்டம் தொடரும் என்று மாணவர்கள் உறுதியாகத் தெரிவித்துவிட்டனர்.

இதனையடுத்து, மாணவர் பிரதிநிதிகளை அழைத்து பிரச்சினை தொடர்பாக பேரவை உறுப்பினர்கள் விரிவாக ஆராய்ந்தனர்.

சித்த மருத்துவத்துறையை நிறுவனமாக்கும் முடிவை ரத்துச்செய்து, அதனை பீடமாக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சிபாரிசு செய்வது என தாம் எடுத்த முடிவு தொடர்பாக பேரவை (16ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.பல்கலைக்கழக பேரவைக் கூட்டம் இடம்பெற்ற கட்டடத்தில் நுழைவாயில்களை சித்தமருத்துவத்துறை மாணவர்கள் நேற்று சிலமணிநேரம் மூடிவைத்தனர். இதனையடுத்து கட்டட ஜன்னல்கள் வழியே மாணவர்களுடன் உரையாடும் பேரவை உறுப்பினர்கள் இருவர்.

## கண்காணிப்புக்குழு கோரிக்கை!

கொழும்பு,ஜூலை27

திருகோணமலை, குரங்குபாஞ்சானில் விடுதலைப் புலிகள் அமைத்து வரும் முகாமை அகற்றமாட்டோம் என்று விடுதலைப் புலிகள் எடுத்துள்ள முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த முகாமை அகற்றுமாறு விடு (16ஆம் பக்கம் பார்க்க)

## வெஸ்பேர்க் மறுப்பு!

கொழும்பு,ஜூலை27

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான பரேரணைகளைக் கொண்ட இரண்டு ஆவணங்களை அரசு வெளியிட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை முன்னாள் நோர்வேத் தூதுவரும் நோர்வே சமாதானக் குழுவின் விசேட ஆலோசக (16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் - ஜனாதிபதி அடுத்த மாதம் பேச்சு!

கொழும்பு,ஜூலை27

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவு தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் அடுத்த மாத நடுப்பகுதியில் சந்தித்து ஆராயவுள்ளனர்.

ஜனாதிபதிக்கு இவ்வாரம் பல நிகழ்ச்சிகள் உள்ளதாலும்-

பிரதமர் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்வதாலும் -

இருவரின் சந்திப்பு அடுத்த மாத நடுப்பகுதியில் இடம்பெறும் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

### இடைக்கால வரைவு குறித்த

# பாலா-தமிழ்ச்செல்வன் சந்திப்பு அடுத்த மாத முதல் வாரத்தில்!

யாழ்ப்பாணம்,ஜூலை27

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசு வழங்கியுள்ள வரைவு குறித்து விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அடுத்த மாதம் முதல்வாரத்தில் ஐரோப்பிய நாடு ஒன்றில் சந்தித்து ஆராயவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் பங்குகொள்ள பல நாடுகளிலிருந்து சட்டவல்லுநர்கள் சந்திப்பு நடக்கும் ஐரோப்பிய நாட்டுக்கு செல்லவிருக்கின்றனர். (16ஆம் பக்கம் பார்க்க)

### நிமால் கொலை தொடர்பாக

# மேலும் 2 ஈ.பி.டி.பி. உறுப்பினரை பொலிஸார் தேடி வருகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜூலை27

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த மேலும் இருவரை தேடிவருவதாக குற்றப்புலனாய்வுப் பொலீஸ் பொறுப்பதிகாரி ரஞ்சித் டி.சில்வா நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் தெரிவித்தார். அந்த இருவரும் புத்தளம் அல்லது மன்னாரில் தங்கியுள்ளதாகத தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார். (16ஆம் பக்கம் பார்க்க)

# காணி அமைச்சரின் திருமலை விஜயம் பாதுகாப்புக் காரணங்களுக்காக ரத்து!

## நடமாடும் சேவைக்கு வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

திருகோணமலை,ஜூலை27

திருகோணமலை நகரத்துக்கு காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று மேற்கொள்ளவிருந்த விஜயம் திடீரென ரத்துச்செய்யப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அமைச்சரின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால், திருமலையில் நேற்று இடம்பெறுவதாக இருந்த காணி அமைச்சின் நடமாடும் சேவையும் நடைபெறவில்லை. நடமாடும் சேவையில் காணி ஆவணங்களைப் பெறுவதற்காக காலையிலேயே திருமலை செயலகத்துக்கு வந்திருந்த நூற்றுக்கணக்கான மக்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

மாவட்டத்தின் காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் காணிகளைப் பகிர்ந்தளிப்பது ஆகிய விடயங்களுக்காக திருமலை செயலகத்தில் நேற்று முதல் மூன்று தினங்களுக்கு காணி அமைச்சின் நடமாடும் சேவைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காணிகள் பகிர்ந்தளிக்கும் விடயத்தில் தற்போது சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. வழங்கப்படுபவற்றில் 75 வீதமான காணிகள் சிங்களவர்களுக்கும் எஞ்சிய 25 வீதமான காணிகளே தமிழ் மற்றும் முஸ்லிம் மக்க (16ஆம் பக்கம் பார்க்க)

# சரணடைந்த சிப்பாய் புலிகளினால் கண்காணிப்புக் குழுவிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை27

கிளாலிக் கடற்படை முகாமில் இருந்து தப்பி வந்து தம்மிடம் சரணடைந்த கடற்படைச் சிப்பாய் ஒருவரை விடுதலைப் புலிகள் நேற்றுக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்தனர்.

அநுராதபுரம், ரத்மலகஹவெவ என்ற இடத்தைச் சேர்ந்த சோமவதாகே சிறில் ராஜபக்ஷ (வயது 21) என்ற இளஞ்சிப்பாயே விடுதலைப் புலிகளிடம் சரணடைந்துள்ளார்.

கிளாலி கடற்படை முகாமில் இருந்து தப்பிவந்ததாகக் கூறப்படும் இந்தச் சிப்பாய் நேற்றுமுன்தினம் (16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# குடாநாட்டில் மீண்டும் 'டெங்கு' பரவும் அபாயம்

## 6 பேருக்கு நோய் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூலை27

குடாநாட்டில் மீண்டும் 'டெங்கு' காய்ச்சல் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தீவிரமாகப் பரவிவரும் காய்ச்சல் நோயுடன் டெங்குக் காய்ச்சலும் பரவ ஆரம்பித்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

வைத்தியசாலை பதிவுகளின்படி அங்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் காய்ச்சல் நோயாளர்களில் 6 பேருக்கு டெங்கு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 5 பேருக்கு டெங்கு இருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அவர்களின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை கண்டறியப்பட்டதன்படி குருநகர், யாழ்ப்பாணம், சுதுமலை தெற்கு, கோண்டாவில் ஆகிய பகுதிகளில் இருந்து டெங்கு நோயாளர்கள் வந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உரும்பிராய், சில்லாலைப் பகுதிகளைச் சேர்ந்த சில நோயாளர்களுக்கு டெங்கு இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

குருநகர், சுதுமலைப் பகுதிகளில் இருந்தே கூடுதலான நோயாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் பரவல் அதிகரித்துக் காணப்பட்டது. இதனையடுத்து, வேறு மாவட்டங்களில் இருந்து குடாநாட்டுக்கு வருவதனைத் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-15)

# வீரமுரசு கலை அரங்க நிகழ்வுகள் இன்றுமுதல் யாழ்.குடாநாடெங்கும்!

யாழ்ப்பாணம்,ஜூலை27

யாழ்.மாவட்டத்தில் சகல பிரதேசங்களிலும் 'வீரமுரசு கலை அரங்க நிகழ்வுகள்' இன்றுமுதல் நடத்தப்படவுள்ளன.

மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வின் முதலாவது நிகழ்வு புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலைய முன்றிலில் இன்று இடம்பெறவுள்ளது.

தமிழீழ மறுமலர்ச்சி கலைஞர்கள் பங்குபற்றும் புதுவை அன்பனின் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட 'நாமார்க்கும் குடியல்லோம்' நாடகம், 'தமிழினத்தின் செழிப்பை அழிப்பதில் விஞ்சி நிற்பது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியா? ஐ.தே.கட்சி அரசா? என்ற தலைப்பிலான பட்டிமண்டபம், நடன நிகழ்வு, சமகால நிலை தொடர்பான உரைகள் ஆகியன இந்த நிகழ்வுகளில் இடம்பெறவிருக்கின்றன.

(ம-3)

## மாவை கந்தன் தேர் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை27

பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ரதோற்சவம் இன்று முற்பகல் 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

25 தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் இன்று ரதோற்சவமும் நாளை தீர்த்த உற்சவமும் இடம்பெறவிருக்கின்றன.

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் வசதியைக் கருத்திற்கொண்டு தெல்லிப்பழை சோதனைச்சாவடியில் இருந்து ஆலயம் வரை விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ். பஸ் நிலையத்தில் இருந்தும் கூடுதலான பஸ்கள் தெல்லிப்பழைவரை சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.

ரதோற்சவத்தையொட்டி காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் மாவைக் கந்தன் அன்னதான மடத்தில் அன்னதானம் வழங்க ஏற்பாடாகியுள்ளது.

(ம-3)

# தம் தனித்துவத்தை தமிழர் இழக்கமாட்டார்கள் இதை எடுத்தியம்புவதே தமிழ்மொழித் தினவிழா

## மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உரை

யாழ்ப்பாணம்,ஜூலை27

தமிழர்கள் தமது தனித்துவத்தை எவ்வேளையிலும் இழந்துவிடமாட்டார்கள் என்பதை வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதே இத்தமிழ்மொழித் தினவிழா.

- இவ்வாறு நேற்று மாலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்மொழித் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் -

எமது மாணவர்களின் பலவகையான ஆற்றல்கள் இத்தமிழ்மொழித் தினவிழா மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழ் கூறும் சமூகம் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளையும் தாண்டி இன்று பல நாடுகளிலும் வியாபித்துள்ளது. அந்தச் சமூகத்தை ஓர் இறுக்கமான தமிழ்ப் பாரம்பரியம் மிக்க சமூகமாக வைத்திருக்கவேண்டிய கட்டுப்பாடு இலங்கை வாழ் தமிழர்களாகிய அனைவருக்கும் உண்டு.

அந்தக் கடமையைத்தான் இத்தமிழ்மொழித் தினவிழா மூலம் செய்கின்றோம் - என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய தமிழமுக் கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

மூத்த மொழியாக உள்ள எமது தமிழ் மொழியை காலத்துக்குக் காலம் வன்பறிப்பாளர்கள் சிதைக்க முயற்சி செய்தனர். திட்டமிட்ட முறையில் பல நடவடிக்கைகளில் எமது மொழி பின்தள்ளப்பட்டது.

எனினும், நாம் எதற்கும் ஈடுகொடுக்கத் தயாராக இருந்தபடியால் அத்தகைய நடவடிக்கைகளை நாம் முறியடித்தோம்.

மொழி, இன, சமூகப் பற்றுக் கொண்ட எமது அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள் ஆகியோரின் விடாமுயற்சியால் எமது மொழி தொடர்ந்தும் முதன்மைமொழியாக இருந்து வருகின்றது.

எமது தலைமைக்கும் இலங்கை அரசுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து எமது மாணவர்கள் பலவற்றைச் சாதித்திருக்கின்றார்கள். இன்னும் பலவற்றைச் சாதிக்க இருக்கின்றார்கள் - என்றார்.

**தமிழ்த்தின விழா**

வடககு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற தமிழ்மொழித் தின விழாவில் வரவேற்புரையை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் நிகழ்த்தினார். தமிழ்த் தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம் ஆகியவற்றை யாழ்.இந்து மகளிர் கலலூரி மாணவிகள் வழங்கினார்கள்.

விழாவில் 'கவின்தமிழ்' நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலின் முதற்பிரதியை மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கத்திடம் இருந்த மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பெற்றுக்கொண்டார்.

மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் நேற்று நடந்தவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் நிகழ்வில் வழங்கப்பட்டன. தொடர்ந்து தமிழ்த்தினப் போட்டியில் வெற்றி பெற்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ம-8)








யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற தமிழ்த்தின விழா நிகழ்வின்போது விருந்தினர்கள் தமிழர் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்படுவதையும் அவர்கள் அழைத்துவரப்படுவதையும் முதலிரு படங்களிலும் காணலாம். மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் வெற்றியீட்டிய முஸ்லிம் மாணவி ஒருவருக்கு பரிசுவழங்குவதை அடுத்த படத்திலும் காணலாம். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை27

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்த் தினப் போட்டிகளில் நேற்று இரண்டாம் நாள் நிகழ்வில் இடம்பெற்ற போட்டி முடிவுகள் வருமாறு:-

**நாடகம்**

(பிரதேச மண்வாசனையை வெளிப்படுத்துபவை)

★ முதலாம் இடம் : சிறிசுப்பிரமணிய மகாவித்தியாலயம்

★ 2ஆம் இடம் : மன்னார் புனித அன்ஸ் மகாவித்தியாலயம்

3ஆம் இடம் : பரந்தன் மகா வித்தியாலயம்.

**விசேட கூத்து (சிந்துநடை)**

★ முதலாம் இடம் : யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

★ 2ஆம் இடம் : முல்லைத்தீவு முருகந்த வித்தியாலயம்.

★ 3ஆம் இடம் : செங்கலடி மத்திய கல்லூரி.

**இசை நாடகம்**

★ முதலாம் இடம் : யாழ். உடுவில் மகளிர் கல்லூரி

★ 2ஆம் இடம் : விபுலானந்த மகா வித்தியாலயம்

★ 3ஆம் இடம் : கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயம்.

**வடமோடி நாட்டுக் கூத்து**

★ முதலாம் இடம் : மட்டக்களப்பு செங்கலடி மத்திய கல்லூரி

★ இரண்டாம் இடம் : முல்லைத்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம்.

★ 3ஆம் இடம் : வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலயம்.

**தென்மோடி நாட்டுக்கூத்து**

★ முதலாம் இடம் : யாழ்.இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி

★ 2ஆம் இடம் : மட்டக்களப்பு கன்னங்குடா மகாவித்தியாலயம்.

★ 3ஆம் இடம் : கிளிநொச்சி புனித பற்றிமா றோ.க.பாடசாலை.

**சிந்து நடை நாட்டுக்கூத்து**

★ முதலாம் இடம் : யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

★ 2ஆம் இடம் : வவுனியா பூந்தோட்ட அ.த.க. வித்தியாலயம்

★ 3ஆம் இடம் : முல்லைத்தீவு முருகந்த வித்தியாலயம். (ம-6)

## கசிப்பு வழக்கில் நால்வருக்கு ரூ.48,000 அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூலை27

கோண்டாவில், கொக்குவில் மற்றும் உரும்பிராய் பகுதிகளைச் சேர்ந்த நால்வர் மீது சுமத்தப்பட்ட கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் அவர்களுக்கு யாழ்.நீதிமன்றம் 48 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செல்லர் நாகமணி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இரத்தினம் பஞ்சலிங்கம், கோண்டாவிலைச் சேர்ந்த வேலாயுதம் பூபதி மற்றும் உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த சின்னப்பு பரமேஸ்வரன் ஆகிய நால்வரையும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்த உத்தரவிட்ட நீதிமன்றம் அவர்களை தலா 2ஆயிரம் ரூபா தர்மப் பணமாகச் செலுத்துமாறும் யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (ம-5)

## பளை கூ.சங்க கிளைகளுக்கு நிரந்தர கட்டடங்கள்

தென்மராட்சி,ஜூலை27

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள இயக்கச்சி, மாசார் ஆகிய பகுதிகளில் பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக் கடைகளுக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

யுத்த அனர்த்தங்களின் போது சேதமடைந்த இந்தக் கிளைக் கட்டடங்களை புதிதாக நிர்மாணிக்க கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் அவசர உதவி நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதி வழங்கியுள்ளார்.

இவற்றை விட பளை நகப் பகுதியல் உள்ள கிளைக் கடைக்கு புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் சி.வதனராசா தெரிவித்தார்.

யுத்த அனர்த்தங்களின்போது சங்கத்தின் அனைத்து கிளைக் கடைக் கட்டடங்களும் முற்றாகச் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-117)

## நல்லூர் பொதுச் சந்தை முன்பாக இம்முறை தண்ணீர் பந்தல்

யாழ்ப்பாணம்,ஜூலை27

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி நல்லூர் பொதுச்சந்தை முன்பாக - பருத்தித்துறை வீதியில் - தண்ணீர்ப் பந்தல் அமைக்க வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றம் முடிவு செய்திருக்கிறது.

வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து பக்தர்களுக்கு தாகசாந்தி வழங்கும் ஏற்பாடுகளைக் கவனிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டது.

மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் வீதியில் பெரிய அளவிலான பந்தல் அமைத்து தாகசாந்தி செய்ய வெளிநாட்டில் உள்ள பலர் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளனர். (ஐ)

# ஆசிரிய வள நிலையம் தீவக வலயத்தில் திறப்பு

மண்டைதீவு,ஜூலை27

தீவக கல்வி வலயத்தில் அமைக்கப்பட்ட ஆசிரிய வள ஆணி நிலையம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கத்தினால் நேற்றுக் காலை 9.30 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

- தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கா.வேலுப்போபால் தலைமையில் நடந்த இந்த விழாவில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் நிலைய பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.விக்கினேஸ்வரன், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் உட்பட வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த வள நிலையம் வேலணை வங்களாவடி சரஸ்வதி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. (ம-88)

கடும் விமர்சனங்களின் மத்தியில்

# ஈராக்கின் புனரமைப்புகளில் ஈடுபட ஜப்பானிய ராணுவத்துக்கு அனுமதி

## அந்த நாட்டு நாடாளுமன்றம் வழங்கியது

டோக்கியோ,ஜூலை27

ஈராக்கில் போருக்கு பின்பான புனரமைப்பில் ஜப்பானிய இராணுவம் ஈடுபட ஜப்பானிய நாடாளுமன்றம் அனுமதி வழங்கியது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜப்பானிய இராணுவம் வெளிநாடொன்றில் பாரிய நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவது இதுவே முதற்றடவையாகும். இதே வேளை - ஜப்பானிய இராணுவம் ஈராக்கின் புனரமைப்புப் பணியில் ஈடுபடுவது தொடர்பாகக் கடுமையான விமர்சனங்களும் ஜப்பானில் எழுந்துள்ளன.

நாட்டின் பாதுகாப்புத் தவிர வேறு நடவடிக்கைகளில் இராணுவத்தை ஈடுபடுத்துவது ஜப்பானிய அரசமைப்புக்கு முரணானது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. அத்துடன்,தமது இராணுவம் வேறுநாட்டில் பணியில் ஈடுபடுத்தப்படுவதை பெரும்பாலான ஜப்பானியர்கள் விரும்பவில்லை என்பது கருத்துக்கணிப்புகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஈராக்கில் ஜப்பானியப் படையினர் மேற்கொள்ள அனுமதிக்கப்படும் பணிகளைச் சரியாக வரையறுப்பதில் ஜப்பானிய அரசு சிக்கலை எதிர்கொண்டுள்ளது. ஈராக்கில் யுத்தப் பிரதேசம் அல்லாத பகுதிகளில் இடம்பெறும் மனிதாபிமானப் பணிகளில் மட்டுமே தமது படையினர் ஈடுபடுவார்கள் என்று ஜப்பானியப் பிரதமர் தெரிவித்துள்ளதாகவும் -

ஆனால், இன்றைய ஈராக்கில் யுத்தப் பிரதேசமல்லாத பகுதியை வரையறுப்பது ஜப்பானியப் பிரதமரால்கூட முடியாத காரியம் என்றும் - பி.பி.ஸி.செய்தியாளர் ஜோனாதன் ஹெட் குறிப்பிட்டுள்ளார். (ஓ)

# சேது சமுத்திரத் திட்டத்தை அனுமன் பாலம் பாதித்துவிடும்

## வை. கோபாலசாமி தெரிவிப்பு

சென்னை,ஜூலை27

இந்தியா - இலங்கை இடையே அனுமன் பாலம் அமைத்தால் அது சேது சமுத்திரத் திட்டத்தைப் பாதிக்கும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்தார்.

தமிழகத்தில் பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜரானபின் செய்தியாளரிடம் அவர் கூறியதாவது:-



சேது சமுத்திரக் கால்வாய் அமையக் கூடாது என்று இலங்கை அரசு கடந்த 50 ஆண்டுகளாக எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

அதனால், 1962 இல் நிறைவேற்றப்படவிருந்த இத்திட்டம் கிடப் பில் போடப்பட்டது. இத்திட்டம் வந் தால் கொழும்புத் துறைமுகத்தின் வருமானம் குறைந்துவிடும் என்று இலங்கை அரசு கருதுகிறது.

எனவே, இத்திட்டத்தைத் தடுப்பதற்காக இரு நாடுகளுக்கும் இடையே இலங்கை அரசு அனுமன் பாலம் அமைக்கும் திட்டம் பற்றி உத்தேசித்தது.

அனுமன் பாலம் கட்டினால், சேது சமுத்திரத் திட்டம் எதிர்பார்க்கும் வகையில் அமையாது. சிறிய கால்வாயாகத்தான் கட்ட முடியும். அதில் பெரிய கப்பல்கள் செல்ல முடியாத நிலை ஏற்படும். இதனால் 130 ஆண்டுகளாகக் காத்திருந்த பயன்கிட்டாமல் போகும். எனவே, அனுமன் பாலம் கட்டக்கூடாது.

இந்த விடயத்தில் தமிழக அரசின் அணுகுமுறை சரியல்ல. இலங்கை அதிபர் சந்திரிகாவின் குரலைத்தான் ஜெயலலிதா எதிரொலிக்கிறார்.

கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்ததால் இந்தியாவுக்கு பெரும் பாதிப்பு. அதனால் இத்தீவை மீட்டே ஆகவேண்டும் என்று ஒரு நாள் பேசுவதும், பின்னர் 23 ஆண்டுகளுக்கு அதை மறந்து விடுவதும் ஜெயலலிதாவின் பாணி என்றார் வைகோ.

# வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோரில் 14,000பேரை பணியில் சேர்க்கத் தடை

## தமிழக அரசு அறிவிப்பு

சென்னை,ஜூலை27

தமிழகத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக பணி நீக்கம் செய்யப்பட்ட அரசு ஊழியர்கள் சுமார் 17 லட்சம் பேரில் சுமார் 14 ஆயிரம் பேரைத் தவிர மற்றவர்களை பணியில் சேர்க்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் போராட்டங்களில ஈடுபடப்போவதில்லை என்ற உறுதிமொழியுடன் மன்னிப்புக் கடிதம் பெறப்பட்டே அவர்கள் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேவேளை, வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது வன்முறையைத் தூண்டிவிட்டதாக சுமார் 14 ஆயிரம் அரசு ஊழியர்கள் மீது பொலீஸார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர். அதனால் அவர்களை பணியில் சேர்க்க முடியாதென்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்ட இம்மாதம் முதலாம் திகதிமுதல் வன்முறைகள் நடைபெற்றதாக தமிழக அரசு தெரிவிக்கவில்லை என்று -

ஆனால், தற்போது வன்முறைகளைத் தூண்டிவிட்டதாக முதல் தகவல் அறிக்கைகளைப் பதிவு செய்துள்ளதாகவும் -

ஓய்வுபெறும் வயதை நெருங்கும் பெண்கள் மீது கூட இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகவும் - அரசு ஊழியர்களின் அமைப்புக்கள் கூறியுள்ளன.

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை பழிவாங்கவே இத்தகைய ஜனநாயக விரோத நடவடிக்கையை தமிழக அரசு மேற் கொண்டுள்ளதாகவும் அந்த அமைப்புகள் மேலும் தெரிவித்தன. (ஓ)

# ஓய்வைக் கழிக்கும் பாப்பரசர் தள்ளாமையால் அவதிப்படுகிறார்

வத்திகான்,ஜூலை27

பாப்பரசர் மூட்டு வலியால் அவதிப்படுகிறார்; அவரது கைகள், கால்கள் இயலாமையால் எந்நேரமும் நடுங்குகின்றன; பேச்சு தழுதழுக்கிறது; அடிக்கடி சோர்ந்து விடுகிறார்.

83 வயதுடைய பாப்பரசர் தற்போது கோடைக்கால விடுமுறையைக் கழித்துவருகிறார்.விடுமுறையைக் கழித்துவரும் பாப்பரசரைக் காண தினமும் நூற்றுக்கணக்கானோர் கூடுகின்றனர். ஆனால், அவர் பார்வையாளர்களைத் தவிர்த்து விட்டுத் தனிமையில் பொழுதைக் கழித்து வருகிறார். வாரத்தில் இரண்டு நாள்கள் மட்டும் (புதன், ஞாயிறு) முக்கிய பார்வையாளர்களைச் சந்தித்து ஆசி கூறுகிறார். கோடை விடுமுறையில் சென்ற பாப்பரசரின் உடல் நிலை மோசமடைந்துவிட்டது என்று கிளம்பிய செய்திகளையடுத்து, நேற்று முன்தினம் அவரை சந்திப்பதற்கு ஏராளமானவர்கள் கூடிவிட்டனர்.

பார்வையாளர்களைச் சந்திப்பதை தவிர்த்து வந்த அவர், வேறுவழியில்லாமல் நாற்பதுக்கும் மேற்பட்ட புதிதாக திருமணமானவர்களுக்கு ஆசி வழங்கினார். பத்துக்கும் அதிகமான மொழிகளில் அவர் ஆசிகளை வழங்கினார். ஆனால், அவரால் சரியாகப் பேசமுடியவில்லை. நாக்கு தழுதழுத்தது.

சக்கர நாற்காலியில் உட்கார்ந்து இருந்தவாறே அவர் ஆசி வழங்கினார். அவரிடம் ஆசிபெற வந்தவர்கள் அவரது இந்த நிலையைப் பார்த்து அவருக்காக பிரார்த்தனை நடத்தினர்.

வெளிநாட்டுப் பயணங்களை தற்போது ரத்துச் செய்துள்ள பாப்பரசர், இந்த ஓய்வு காலத்தில் சுயசரிதை எழுதப்போகிறார் என்று வத்திகான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ)

## உலகின் உயரமான ஏரியருகே திருமணம்

பெய்ஜிங்,ஜூலை27

உலகின் கூரை என்று அழைக்கப்படும் திபெத்தில் உள்ள அழகிய ஏரியின் கரையில் எதிர்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதி 99 ஜோடிகளுக்குத் திருமணம் நடைபெறவிருக்கிறது. திபெத் சுயாட்சிப் பிரதேசத்தின் பிராந்திய சுற்றுலா வளர்ச்சிக் குழு இத் திருமண ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

நாம்கோ ஏரி என்ற இந்த ஏரி கடல் மட்டத்திலிருந்து 4 ஆயிரத்து 718 மீற்றர் உயரத்தில் இருக்கிறது. ஆயிரத்து 940 கி.மீ. பரப்புக்கு இதில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. தலைநகர் லாசாவிலிருந்து வடமேற்கில் இந்த இடம் 240 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இது சுற்றுலாத் தலம மட்டுமல்ல பௌத்தர்களுக்கு புனிதத் தலமும் கூட.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பௌத்தர்கள் இந்த ஏரியைச் சுற்றி வந்தபடியே தங்களுடைய மத நூல்களைப் பாராயணம் செய்வார்கள். அந்த நாள் ஓகஸ்ட் 19 ஆம் திகதி வருகிறது. அதையொட்டியே கூட்டுத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஜப்பானில் நில நடுக்கங்கள்!

வடக்கு ஜப்பானில் ஏற்பட்ட இரு நிலநடுக்கங்களால் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். தலைநகர் டோக்கியோவிலிருந்து வடக்கே 300 கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள மியாகி கடற்கரைப்பகுதியில் இந்த நிலநடுக்கங்கள் மையம் கொண்டிருந்தன.

இரு நிலநடுக்கங்களில் ஒன்று ஜப்பானில் அடிக்கடி ஏற்படும் நிலநடுக்கங்களைப் போன்று சாதாரணமாக இருந்ததாகவும் -

ஆனால், மற்றைய நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6ஆகப் பதிவாகியிருந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

# கியூபாப் புரட்சியின் 50ஆவது ஆண்டு நிறைவு

கியூபா புரட்சியின் 50ஆவது ஆண்டு நிறைவை கியூபா மக்கள் நேற்றுக் கொண்டாடினர். 1953ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் திகதி 'மொன்கடா' இராணுவ முகாமை பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான கம்யூனிஸத் தீவிரவாதிகள் தாக்கினர். இத்தாக்குதல் தோல்வியடைந்த போதிலும், பிடல் காஸ்ட்ரோவை அதிபராக்கிய கியூபாப் புரட்சிக்கு இதுவே ஆரம்பமாக அமைந்தது.

அதிபர் பிடல் காஸ்ட்ரோவின் பின்னர் கியூபா அரசியலில் என்ன நடக்கும் என்பதை எவரும் ஊகித்தறியமுடியாத நிலையில் புரட்சியின் ஆண்டு விழாவை கியூபா மக்கள் கொண்டாடுகின்றனர். கியூபாப் புரட்சியின் சில வரலாற்றுப் பதிவுகளை கீழுள்ள படங்களில் காணலாம்.



புரட்சியின் போது தாம் கைப்பற்றிய இராணுவ முகாம் ஒன்றின் அருகே ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் காஸ்ட்ரோ



அப்போதைய லத்தீன் அமெரிக்க நாடுகளின் பிரச்சினைகளுக்கு புரட்சியே தீர்வு என்று வழிகாட்டியவரும், ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த மருத்துவரும், கியூபாப் புரட்சியில் தளபதியாகச் செயற்பட்டவருமான என்ஸ்டோ சேகுவாரா (அம்புக்குறி இடப்பட்டு காட்டப்பட்டுள்ளவர்) 1959 ஆம் ஆண்டு தனது திருமணத்தின்போது...!



படிஸ்டாவின் ஆட்சி அகற்றப்பட்ட மோதல்களின் பின்னர் - 1959ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி - கியூபாப் புரட்சியின் ஆரம்ப தின நிகழ்வுக்காக தலைநகர் ஹவானாவில் திரண்ட சுமார் 5லட்சம் கியூபர்கள்.



1970ஆம் ஆண்டு கப்பல் ஒன்றில் அமெரிக்காவுக்கு குடிபெயரும் கியூபர்கள். கியூபாவிலிருந்து அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாகக் குடிபெயர்பவர்கள் இன்றும் இரு நாடுகளுக்கும் பிரச்சினையாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்பகம் வீதியில் இலக்கம் 35, வீடும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (20712)

பருத்தித்துறை வீதி, கோப்பாய்ச் சந்தி பெற்றோல் செட்டுக்கு அருகில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 1) சிவப்பிரகாசம், பருத்தித்துறை வீதி, கோப்பாய் சந்தியடி. 2) திரு.காந்தி, 478, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 0712 - 355330 (20729)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அயலில் 10 பரப்புக்காணி, நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி, உரும்பிராய். (20697)

உரும்பிராய, வேம்பன் ஒழுங்கையில் 63/4 பரப்புக் காணி விற்பனைக குண்டு. தொடர்பு: க.சிவசுப்பிரமணியம், சட்டத்தரணி, உரும்பிராய் (20698)

71 ஸ்ரீ இலக்கமுடைய லான்ட் மாஸ்ரர் ஒறிஜினல் பெயின்ற் புதிய பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.57, K.K.S. றோட், கொக்குவில் சந்திக்கும் பூநாரி மரத்துக்கும் இடையில். (20735)

சாவகச்சேரி -மட்டுவில் - நுணாவில சந்தியில் கடை, மில் போடக்கூடிய மூன்று பரப்புக்காணியும், தோட்டக்காணி படைப்புவளவு வீடு கட்டும் காணியும் சக்கிடுத்தார் வளவுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.சிவகுமாரன், 34, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.(20669)

31நாள் நிறைந்த, கறுப்பு நிற இன அல்சேஷன் நாய்க்குட்டியும், இரண்டு வயது நிறைந்த அல்சேஷன் ஆண் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மார்க்கண்டு, M.S. லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.(20580)

TVS Scooty Pep மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சண்முகலிங்கம், அம்பாள் அகம், ஸ்ரேசன் றோட், மருதனார்மடம், T.P. 077 6121914 (20768)

தற்சமயம் பாவனையிலுள்ள Gestetner-250 (Legal Size) ஓவ்(f) செற் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.0777 481164, 0777 732296.(20665)

புதிய இரு உருத்திர வீணைகள விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. இரத்தினசிங்கம், நாவலர் மடம் (ஐங்கரா பேக்கரி ஒழுங்கை), நவிண்டில், கரவெட்டி. (20407)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள லேனில் 10 பரப புக்காணியுடன், நல்ல நிலையிலுள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: பேர்ள் றிச். T.P.: 222 2882.(20685)

கொக்குவில், நந்தாவில் ஒழுங்கையில் 4 பரப்புக் காணியில் 4 அறைகளைக் கொண்ட, சகல வசதிகளும உடைய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.12, சம்பியன் லேன், கொக்குவில். (20626)

யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்கு வீதி, 120 ஆம் இலக்க வீடு (சகல வசதிகளுடன்) விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்ளவும் தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 19(100), 3ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் T.P. 222 - 3133 (20745)

சாவகச்சேரியில் (பழைய இலங்கை வங்கிக்கு அருகில்) வெளிநாட்டு முறையில் கட்டப்பட்ட வீடு, மூன்று பரபபுக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மா.கைலாயநாதன், C/o பஞ்சலிங்கம் (ஆசிரியர்), ஐயா கடையடி, மீசாலை T.P. 070 - 213388. (சி-2953)

## காணியுடன் வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை விஸ்வகுல ஒழுங்கையில் (பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில்) 31/2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு தொடர்பு: பா.பாஸ்கரன், இல.172, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (ராஜா தியேட்டர் முன்பாக).(20733)

## காணி விற்பனைக்கு

39/1, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திலகவதி சண்முகநாதன், 39/1, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (20747)

## வியாழ மாற்றம் எப்படி?

ரூபா 15/- எங்கும் விற்பனையாகின்றது. கணிப்பாசிரியர் 'சத்யா' ஆனைக்கோட்டை (கடவுள், மனிதன், உலகம்) இணைப்புடன் ஆத்ம தத்துவ ஞான விளக்கங்களும் அடங்கியது. எழுதியவர்: வைத்திய கலாநிதி Dr. வ.சின்னப்பு, சாவகச்சேரி. (20757)

## நாய்க்குட்டிகள்

நல்ல இன 4 மாதங்கள், 6 மாதங்கள் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(26700)

## இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 1. மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். 2. மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். சுத்தம்செய்தல் இலவசம். (20673)

## கோழித்தீன் விற்பனை

எம்மிடம் தரமான Prima கோழித தீன் வகைகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம் உப விநியோகஸ்தர்களுக்கு 5% தொடக்கம் 7% வரை கழிவு கொடுக்கப்படும். ஏற்றுக் கூலி இலவசம். தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (20753)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1962 இல் பிறந்த, அச்சுவினி, சைவபோசனம், செவ்வாய்க்குற்றமுள்ள ஆங்கில ஆசிரியைக்குத் தகுந்த மணமகன் தேவை. அரச, தனியார் வியாபாரத்துறை விரும்பத்தக்கது. தாரம் இழந்தவரும் கவனிக்கப்படும். ஜாதகக் குறிப்பு, விலாசத்துடன். தொடர்பு: விள.இல. 1965, மே/பா உதயன். (20755)

## ஆலோசனைக் கூட்டம்

சங்கானை,ஜூலை27

சங்கானை அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு தலைவர் நா. நாகலிங்கம் தலைமையில் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. (ஒ-10-29)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எங்கள் குடும்பத் தலைவி

திருமதி

**இராசா இரத்தினம்மா**

தோற்றம் 05.04.1936 — மறைவு 28.06.2003

அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசிய அம்மாவே! உங்கள் அன்புமுகம் என்றும் எம்நெஞ்சை விட்டகலாது.

ஆத்மாசாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

வீட்டுக்கிருத்தியம் இன்று (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கேணியடி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(20766) (21-26-19-18)


- Microsoft Internet Explorer

File Edit View Favorites Tools Help

Back Stop Refresh Home Search Favorites History Mail

Address http://www.barbara.com Go Links

**Barbara Mulvaney**
Computer Training Centre
123, Temple Road Jaffna
T.P:- 021 222 5971

இணையத்தினூடான எமது புதிய பாதை

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இயங்கி வருகின்ற எமது கணனி நிறுவனமானது அவர்களின் ஆதரவுடன் புதியதசாப்தத்தை நோக்கி மாணவர்களை அழைத்துச் செல்கிறது.

இதன் பரிமாணத்தின் முதல் கட்டமாக,
Internet & E-Mail கற்கை நெறிகள் '02.08.03 அன்று ஆரம்பமாக இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இதில் இணைய விரும்பும் மாணவர்கள் உடனடியாக பதிவை மேற்கொள்ளவும்.

Done My Computer



## கௌரவமான நிறுவனத்தில் இணைவதற்கு அரியதொரு சந்தர்ப்பம்

சர்வதேச தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களின் பகுதியாக விளங்கும் சிங்கப்பூர் பண்டமாற்றில் பிரதான பங்கு வகிக்கும் நிறுவனமானதும், உலகெங்கிலும் 36 நாடுகளில், 500 இற்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப நிலையங்களை கொண்டதுமான சிங்கப்பூர் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் **[Singapore Informatics] யாழ்ப்பாண கிளைக்கு** பின்வரும் பதவி வெற்றிடங்களை கோருகின்றது.

### 1. நிலைய முகாமையாளர் (Centre Manager)

முகாமைத்துவ பட்டம்பெற்ற, கணணி, ஆங்கில பேச்சு,எழுத்து திறனுடைய மற்றும் யாழ்ப்பாண பாடசாலைகள் & பல்கலைகழகத்துடன் தொடர்புள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

### 2. விரிவுரையாளர்கள் (Lecturers)

கணணியியல் **Diploma/Advanced Diploma** கற்பித்தலுக்கு கணணியியல் பட்டதாரி அல்லது அங்கீகரிக்கப்பட்ட துறை சார் தகமையுடையவராக இருத்தல் வேண்டும்.
ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக் கூடியவராகவும், **C, C++, Java, Multimedia, Networking, e-Commerce, e-Security, SQL, HTML, Flash, Adobe Photoshop, Java Script** ஆகிய பாடநெறிகளில் குறைந்தது 5 பாடநெறிகள் போதிப்பதில் திறமையுடையவராக இருத்தல் வேண்டும்.

### 3 வெளியக விற்பனை பிரதிநிதி (பெண்) (Out House Sales Personnel)

சந்தைப்படுத்தல் தகமையுடைய, ஆங்கிலத்தில் சரளமாக உரையாடும் திறமைமிக்க, நல்ல தோற்றமும், மாணவர்களை வழிநடத்தும் ஆற்றலுமிக்க பெண்கள் மேற்படி பதவிக்கு தேவை.

### 4. சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி அலுவலர் (Market Research Officer)

முகாமைத்துவ / வர்த்தக / சந்தைப்படுத்தல் பட்டதாரி, மேற்படி தொழிலில் முன்னனுபவமுடைய ஆங்கிலத்தில் சரளமாக உரையாடும் திறமைமிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி :

**Manager**
**UNITEC INSTITUTE OF BUSINESS STUDIES**
**18/1, Ramakrishna Rd, Colombo-06.**
Fax : 448211 E-mail : cm_ubs@sltnet.lk



SINGAPORE INFORMATICS
SINGAPORE INFORMATICS
SINGAPORE INFORMATICS

## வெகுவிரைவில் யாழ் மண்ணில் தடம் பதிக்கும்

சிங்கப்பூர் இன்போ.'மற்றிக்ஸ்
சிங்கப்பூர் இன்போ.'மற்றிக்ஸ்
சிங்கப்பூர் இன்போ.'மற்றிக்ஸ்

*இன்று ஆசியாவிலே முன்னணியில் இருக்கும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சிக்கல்வி நிறுவனமாகிய சிங்கப்பூரில் உள்ள வரையறுக்கப்பட்ட தகவல் பரிவர்த்தனை நிலையமானது 500 கிளை நிறுவனங்களைத் தன்னகத்தே கொண்டு உலகின் 42 நாடுகளில் பரந்து காணப்படுகிறது. அதன் அங்கத்தவர் என்ற வகையில் நாமும் பெருமையடைகின்றோம்.*



07/07/2003 அன்று வெள்ளவத்தை புதிய கிளை திறப்பு விழாவில் கலந்து கொண்ட Singapore Informatics Holdings, Singapore இன் பிரதித் தலைவர் பேராசிரியர். வட்டவல மற்றும் வெள்ளவத்தைக் கிளையின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு. G. R. பத்மராஜ் ஆகியோர் வைபவரீதியாக நாடா வெட்டி திறந்து வைப்பதைக் காணலாம்.

### OUR STRENGTH

- குளிரூட்டப்பட்ட ஆய்வுகூடம். விரிவுரை மண்டபங்கள் மற்றும் நூலகம்.
- வலைப்பின்னலையுடைய ஆய்வுகூட வசதிகள் மற்றும் நவீன கணணி வசதிகள்.
- வரையறுக்கப்படாத ஆய்வுகூட நேரங்கள்.
- இணையத்தள வசதி.
- அனுபவமிக்க விரிவுரையாளர்கள் குழு.
- படிப்பதற்கேற்ற அமைதியான சூழல்.

### IT COURSES

NCC + National Computing Centre-UK and University of Cambridge

- **DCS** (Diploma in Computer Studies - Awarded by NCC-UK and UCLES)
- **CIT** (Certificate in Information Technology)
- **CCS** (Certificate in Computer Studies)
- **OIT** (Office Information Technology)
- Mastering Visual Basic
- Mastering Java

**BSc (Hons) in Computing**
1 ஆம் வருடம்

**NCC - UK (Diploma)**



**Web Design Studio**
- HTML, JavaScript
- Flash MX
- Front Page
- Photo Shop

சிறுவர்களுக்கான கணணிக் கல்வி
வயதெல்லை: 8 -15
Commencing on this Week



**Internet and E-mail**
சிறுவர் மற்றும் பெரியோருக்குரிய தொழில்நுட்ப பாடநெறி (Internet நுட்பங்கள்)
கட்டணம் : 1500/-

**SINGAPORE INFORMATICS**
COMPUTER SCHOOL
KOTAHENA CENTRE
No: 117 New Chetty Street, Col- 13.
Tel: 433291-2 Fax: 433292
kotahena@singaporeinformatics.lk

CONTACT DETAILS

SUB FRANCHISEE
UNITEC INSTITUTE OF BUSINESS STUDIES

**SINGAPORE INFORMATICS**
COMPUTER SCHOOL
WELLAWATTE CENTRE
No: 18/1, Ramakrishna Road, Col-6.
Tel: 075-552468-9 Fax: 075-552469
wellawatte@singaporeinformatics.lk

உதயன்

# வெள்ளைக்கார ஆங்கிலேயரின் சிறுமைத்தனம் இது!

இலங்கையரை அவமானப்படுத்தும் ஒரு நடவடிக்கை கடந்த 23ஆம் திகதியிலிருந்து சத்தமின்றி அரங்கேறத் தொடங்கியிருக்கின்றது.

பிரிட்டனுக்குச் செல்வதற்கு விஸா பெற விண்ணப்பிக்கும் இலங்கையர் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்களது விரல் அடையாளங்களை (உயிரியல் ரீதியான அடையாளங்களை) பெறும் முறை அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றது.

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்குச் செல்ல முனையும் ஒவ்வொருவரிடமிருந்தும் - வழமையாக முக்கிய சந்தேக நபர்கள், கிரிமினல்களிடமிருந்து நீதிமன்றம் மற்றும் பொலீஸார் பெற்றுக்கொள்வதுபோல - கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக்கொண்டு, அதனை வைத்துப் பேணப்போகின்றது பிரிட்டன்.

விஸா பெறுவதற்கு கைவிரல் அடையாளத்தைப் பெறும் நடைமுறையை - மாற்றாந்தாய் செயற்பாட்டை - பிரிட்டன் முதன்முதலில் இலங்கையில்தான் அறிமுகப் படுத்துகிறது.

இலங்கையர் அனைவரையும் அவமானப்படுத்தும் - நாகரிகமற்ற - இந்த நடைமுறை, ஆரவாரம் ஏதுமின்றி 'கப்சிப்' என அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பது தான் வேதனையிலும் வேதனை.

இலங்கையரின் சுயமதிப்புக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் - அவமானப்படுத்தும் - இந்த நடவடிக்கை குறித்து மௌனம் காப்பதன்மூலம் அதற்கு அங்கீகாரமளிக்கும் போக்கில் செயற்படுகிறார்கள் நமது நாட்டு அரசியல் வாதிகள்.

இராஜதந்திர கடவுச்சீட்டுக்களை வைத்திருப்போரையும் அரச ரீதியிலான பணிக்குச் செல்வோரையும் தவிர ஏனையோர் அனைவரும் விஸா விண்ணப்பப்படிவத்தை தூதரகத்தில் சமர்ப்பிக்கும்போது - அவர்களுக்கு விஸா கிடைக்குமோ கிடைக்காதோ என்பது உறுதிப்படுத்தப் பட முன்னரே - தமது கைவிரல் அடையாளங்களை பிரிட்டன் தூதரக அதிகாரிகளிடம் வழங்க வேண்டியிருக்கிறது. உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உட்பட நீதித்துறை ஊழியர்கள், துறைசார் வல்லுநர்கள், நிபுணர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் என எந்தத் தரத்தில் இருப்போரும் பிரிட்டன் தூதரகத்தில் 'கிரிமினல்' சந்தேக நபர்கள் போல் கைவிரல் அடையாளம் தரவேண்டிய கட்டாயம் இன்று. இலங்கைத் தீவுக்கே பெருத்த அவமானம் இந்த நடவடிக்கை.

தனது நாட்டுக்குள் அரசியல், பொருளாதாரத் தஞ்சம் கோரும் இலங்கையர்களை, அத்தகைய தஞ்சம் கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலிக்காமலேயே திருப்பி அனுப்புவதற்கு வசதியாக பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் (SAFE COUNTRY) இலங்கையை அண்மையில்தான் சேர்த்துக்கொண்டு அறிவித்தது பிரிட்டன். அந்தப் 'பாதுகாப்பான' நாட்டிலிருந்து விஸாவுக்கு விண்ணப்பிப்போருக்குத்தான் இந்தக் கீழ்த்தரமான நடைமுறையை முதன்முதலில் அறிமுகப்படுத்தியிருக்கின்றது பிரிட்டன்.

இலங்கையில் எதிர்ப்பின்றி இந்த நடவடிக்கை நிறைவேறியிருப்பதால், இதே 'கோமாளித்தனத்தை' ஏனைய மூன்றாம் மண்டல நாடுகளிலும் இலகுவாகத் திணிக்க பிரிட்டன் தொடர்ந்து முயலும் என எதிர்பார்க்கலாம்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இடம்பெற்றுள்ள இலங்கைக்கு அந்த அமைப்புக்கு குறிப்பிட்டுத் தலைமை வகிக்கும் பிரிட்டன் தரும் கௌரவம் இது தான்.

கடந்த மாதம் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்த சமயம், அவரது காதில் இந்த விடயத்தைப் போட்டு, இந்நடைமுறை செயற்பாட்டுக்கு வரும்போது, இலங்கை அரசுத் தரப்பை வாய்மூடி மௌனம் காக்கச்செய்வதற்கான ஒழுங்குகளை பிரிட்டனில்வைத்தே அந்த நாட்டு அதிகாரிகள் செய்துவிட்டதாகத் தகவல். அதுதான் இவ்விவகாரம் ஆரவாரமின்றி அரங்கேறியதன் அடிப்படை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இலங்கைக்கு பிரிட்டன் உட்பட எழுபது நாடுகளைச் சேர்ந்தோர் விஸா பெறாமலேயே வரமுடியும். இங்கு தாம் வந்திறங்கும் விமான நிலையத்தில் அல்லது துறைமுகத்தில் உரிய விஸாவை - பிரச்சினை ஏதுமின்றி - அவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என அவர்களுக்கு வசதியும் கௌரவமும் அளித்திருக்கின்றது இலங்கை. அதற்குப் பிரதியுபகாரமாகத்தான் இந்த 'அகௌரவ' விதிமுறையை இலங்கையருக்கு வழங்கியிருக்கின்றது போலும் பிரிட்டன்.

விஸா விண்ணப்பத்தில் கைவிரல் அடையாளம் பெறும் முறையை பிரிட்டிஷ்காரர்களுக்கு இலங்கைத்தரப்பும் நடைமுறைப்படுத்தினால் நிலைமை என்னாகும்? தங்களை மனித குலத்தின் உயர்ந்த ரகத்தினர் எனக் கருதிக்கொள்ளும் வெள்ளைத்தோல் ஆங்கிலேயர்கள் இதனை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மனித கௌரவத்துக்கான இயக்கங்கள், அமைப்புகள்கூட, வெள்ளை நிறத்துக்காக மௌனம் சாதிக்கின்றனவா?

மனிதன் வாழ்வதற்கு முதலில் அவசியமானது மதிப்பும் கௌரவமும் தான். அதற்காகப் போராடும் இனம் தமிழர்கள்.

பிரிட்டனின் இந்த நடவடிக்கை ஒருவகையில் நமது மதிப்புக்கு, சுயகௌரவத்துக்கு, மனிதத்துவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் செயல் என்பதை நாம் அனைவரும் புரிந்து கொண்டாக வேண்டும். அது புரிந்தால் அதனை எதிர்க்கும் இயல்பு தானாகவே எமக்கு வந்துவிடும்.

# கசூரினா கடற்கரைப் பகுதியில் கலாசார சீரழிவுகள் அதிகரிப்பு

## தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

காரைநகர்,ஜூலை27

காரைநகர் கசூரினா கடற்கரையில் கலாசார சீரழிவுகள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கசூரினா கடற்கரைக்கு வருவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக வார இறுதி நாள்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கசூரினா கடற்கரைக்கு வந்து செல்கின்றனர்.

இவ்வாறு வருபவர்களில் சிலர் அங்கு துர்நடத்தையில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் மதுபோதையில் கசூரினா கடற் கரைகளில் வாகனங்களை மிக வேகமாகச் செலுத்திச் செல்கின்றனர். இதனால் அடிக்கடி விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன. இந்த வீதிகளில் பொதுமக்கள் போக்குவரத்து செய்வதற்கு அச்சமடைவதாகவும் கூறப்படுகின்றது.

காரைநகரின் இயற்கை எழில்மிக்க இப்பிரதேசத்திலும் அருகில் உள்ள வரலாற்று பிரசித்திபெற்ற ஈழத்துச் சிதம்பரம் ஆலயப் பகுதியிலும் ஒழுக்கம், கட்டுப்பாடுகளைப் பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் கோரிக்கைவிடப்பட்டுள்ளது. (ஓ-73)

# நாட்டு நடப்பு

## காதலியின் கவலை

முல்லை வளவ!
தந்தையுடன் தனயனும் ஒன்றாய்ச் செல்ல
தந்தை யார் தனயன் யாரென அறியிலேனோ!
தந்தையோ தடியனாக தளர்வின்றி முன் செல்ல
தனயனோ தளர்வுற்று தடுமாறி பின் செல்கின்றானே
நாளாந்தர் மங்கையர்கள் நகைக்கின்றார் இவரைப் பார்த்து
ஏன் இந்தக் கதி இங்குள்ள இளைஞருக்கு
நடைபிணமாகி நலிவுற்று திரிகின்றாரே.

கொடிய இக்கசிப்பினை உட்கொண்ட கொடுமை தானோ?
கூடாத கூட்டம் கூடி குடித்திய விந்தைதானோ?
காரிகையர் மீது கண்வைத்த காதலாலோ?
முல்லை வளவ நீயும் முழுமையாய் இதை யறிந்து
நல்லகா வாலியர் வாழ நலம்பெற திட்டமிட்டு.
நாட்டின் நிலைகண்டு நாணும் கயல்விழியாள்.

- விகடகவி.

# இடைத்தரகர்களின்றியே நேரடியாக அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்கள்

## அரசு திட்டமிடுவதாக அமைச்சர் ராஜித தகவல்

கொழும்பு,ஜூலை27

இடைத்தரகர்களின்றியே அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களை நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது.

காணி அமைச்சர் ராஜிதசேனாரத்ன இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார். ஒரு குறிப்பிட்ட வீதகழிவுடன் ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட அரசு தீர் மானித்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

உத்தேச உடன்படிக்கையின்படி விமானப்படை விமானங்களை நவீன மயப்படுத்துவதற்கு 400கோடி அமெரிக்க டொலர்களை அமெரிக்கா வழங்கவுள்ளது.

கடற்படையின் 'ராடர்' கருவிகளைப் புனரமைத்து நவீன மயப்படுத்த 769 கோடி யூரோவையும் அமெரிக்கா வழங்கும்.

திடீரென யுத்தம் மூண்டால் அதை எதிர்கொள்ள பாதுகாப்புப் படையினரைத் தயார்ப்படுத்திக்கொள்ளும் நோக்குடன் அரசு இத்திட்டத்தை முன்னெடுத்திருக்கிறது.

- இவ்வாறு அமைச்சர் சேனாரத்ன கூறியிருப்பதாக 'லக்பிம' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ)

# அதிகரிக்கும் குற்றச் செயல்களைத் தடுக்க அரச நிர்வாகம் தவறிவிட்டது

## மனித உரிமை ஆணையாளரிடம் சுட்டிக்காட்டு

அரியாலை,ஜூலை27

யாழ். மாவட்டத்தில் முன்னர் எப்போதும் இருந்திராதவாறு குற்றச் செயல்கள் அதிகரித்திருக்கின்றன. அரசமைப்பு ரீதியாக உறுதிசெய்யப்பட்ட பிரஜைகளின் பாதுகாப்பைப் பேணுகின்ற கடமைகளை அரசு சரிவர நிறைவேற்றத் தவறியிருப்பதையே இது காட்டுகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சி.வீ.கே.சிவஞானம்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் என்.செல்வக்குமாரனுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல்வல்லுறவு என்று அடாவடித்தனமான குற்றச் செயல்கள் குடாநாட்டில் தலையெடுத்திருக்கின்றன. இதுபோன்ற ஒரு சமூக ஒழுங்கு சீர்குலைவு முன்னர் இருந்ததில்லை. சட்டம் ஒழுங்கைப் பேணவேண்டிய அரசின் இயந்திரங்களே இதற்குப் பொறுப்பு ஏற்கவேண்டும். சட்டம் ஒழுங்கு பராமரிப்பு சீர்குலைந்து மக்கள் பயபீதியுடன் வாழ்கின்ற நிலைமை உருவாகியிருக்கிறது.

நாட்டில் அரசமைப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் மக்களின் பாதுகாப்பைச் சரிவரப் பேணுவதற்கு அரசு தவறிவிட்டது. அதிகரித்துவரும் குற்றச்செயல்கள் இதனையே தெளிவாகக் காட்டுகின்றன. குற்றம் இழைப்போர் சட்டத்தின் பிடியில் சிக்காமல் தப்புவதும் சிக்குவோர் விரைவில் வெளியே வருகின்ற நிலைமையுமே குற்றங்கள் மலிந்துபோவதற்குப் பிரதான காரணமாக உள்ளது.

- இவ்வாறு சீ.வி.கே.சிவஞானம் சுட்டிக்காட்டினார். (ஐ-17)

# சிறுவர்களின் பாட நூல்களில் நிலக் கண்ணிகள் பற்றிய தகவல்

## தேசிய கல்வி நிறுவனம் திட்டம்

நிலக்கண்ணிகளால் சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக அவை பற்றி தகவல்களைப் பாட நூல்களில் சேர்த்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சிறுவர்களின் சமூகக்கல்வி, வரலாறு, சுற்றாடல் போன்ற பாடநூல்களில் 'சமகால பிரச்சினைகள்' என்ற தலைப்பில் நிலக்கண்ணிகள் பற்றிய தகவல்களைச் சேர்த்துக்கொள்ள தேசிய கல்வி நிறுவனம் திட்டமிட்டு வருகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிலக்கண்ணிகளால் ஏற்படும் அனர்த்தங்களில் பெரிய அளவில் பாதிக்கப்படுவோர் சிறுவர்கள் ஆவர். எனவேதான் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ஐ)

# ஓடு பாதைகள் சேதமடைந்துள்ளதால் பலாலியில் விமானங்களை தரையிறக்க முடியாத நிலை

பலாலி விமான நிலையத்தின் விமான ஓடுபாதைகள் மிகவும் சேதமடைந்துள்ளதை அடுத்து அங்கு விமானங்களைத் தரையிறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று விமானப் படையினரால் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான ஓடுபாதைகளைப் புனரமைப்பதற்கு 360 கோடி ரூபா தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இப்புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைய சுமார் 4 மாதங்கள் தேவைப்படும் எனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதனால் விமானங்கள் ஏறி இறங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்படலாம் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களில் விமானப்படைக்குச் சொந்தமான 'அன்ரனோவ் 32' ரக விமானங்களின் இயந்திர சாதனங்கள் பழுதடைந்தமைக்கும் இந்த ஓடு பாதைகள் சேதமடைந்தமையே காரணம் என்று அவற்றைப் பரிசோதனைக்கு உட்படுத்திய குழுக்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்தியாவின் 'கிரடிட் லைன்' நிறுவனத்தின் கடன்திட்ட அடிப்படையில் ஓடுபாதைகளைப் புனரமைப்பதற்கு இந்தியத் தூதரகத்தின் ஊடாக இந்திய அரசிடம் உதவி கோரப்பட்டிருப்பதாகவும் இதுதொடர்பாக இந்திய அரசின் பதில் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படாமைக்குக் காரணம் எனவும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-10)

## நாளை

ஆடி 12
திங்கட்கிழமை
(28.07.2003)
திதி : சதுர்த்தசி
பிற்பகல் 12.42 வரை.
நட்சத்திரம் : புனர்பூசம்
முன்னிரவு 9.34
ஆடி அமாவாசை விரதம்
சுபநேரம் : 12.02 - 1.12
ராகுகாலம் : 7.32 - 9.02
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

எப்பொழுதும் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைத்திருப்பவன் தனது சுய ஒழுக்கம் மற்றும் நேர்மையின் மீது மதிப்புக் கொள்ள மாட்டான்.

# நாதஸ்வர மேதையின் உருவப்படம் நல்லை ஆதீனத்தில் திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை27

அண்மையில் காலமாகிய நாதஸ்வர வித்துவான் என்.கே. பத்மநாதனின் உருவப்பட திரைநீக்கமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நல்லூர் நல்லை ஆதீன கலாசார மண்டபத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளன.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் மாலை 4.00மணிக்கு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

என்.கே.பத்மநாதனின் உருவப்படத்தை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திரைநீக்கம் செய்வார்.

நல்லை ஆதீன முதல்வர் மற்றும் அருட்கவி சி.விநாசித்தம்பி ஆகியோர் பிரார்த்தனை உரைகளை வழங்குவர்.

யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன், துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ், நீதிபதி இ.த.விக்னராஜா, கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர், ஓய்வுபெற்ற நீதிபதி எஸ்.ஞானசுகநாதன், ஓய்வுபெற்ற ஆசிரியை புஸ்பா செல்வநாயகம், நாதஸ்வர வித்துவான் என்.ஆர். சுந்தரமூர்த்தி, முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், இந்துவிவகார அமைச்சின் உதவிச் செயலாளர் துரைத்திலீங்கம், கலாநிதி கருணைராஜா, வர்த்தக வங்கி முகாமையாளர் சதுவீந்திரா, கலாநிதி எஸ்.திருநாவுக்கரசு, வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா, செல்லப்பா நடராஜா, கந்தையா சோமசேகரம் ஆகியோர் ஆத்மசாந்தி உரைகளை நிகழ்த்துவர்.

பிரம்மஸ்ரீ மாதுரு. வீரமணிஐயர் கவிதாஞ்சலி வழங்குவார்.

# நாம் இல்லாததைக் கேட்கவில்லை இழந்ததையே கேட்டு நிற்கின்றோம்!

## யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,ஜூலை27


நாங்கள் இல்லாததைக் கேட்க வில்லை. இருந்ததையும் இழந்ததை யுமே கேட்டு நிற்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் சி.இளம்பரிதி.

ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலய முன்றிலில் நடை பெற்ற தமிழ்த்தேசிய வீரர்கள்தின நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:-

'எங்களுடைய மண்ணில் நாஙகளே எங்களது அரசியல் அபிலாஷை களைப் பூர்த்திசெய்து வாழ்வதை யாரும் தடைசெய்யமுடியாது.

'இந்த இலங்கைத் தீவிலே சிங்  களவர்கள் சிங்கள மக்களை ஆட்சி செய்யவேண்டும். தமிழர்கள் தமது மக்களை ஆளவேண்டும். மறுக்கப் பட்டுள்ள எமது விடுதலையைப் பெறுவதற்காக நாம் அரசியல் ரீதியான சாதகமான சூழ்நிலையினை உரு வாக்கிக்கொண்டிருக்கின்றோம்.

'யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் பல்வேறு பிரச் சினைகளை எதிர்நோக்கியிருக்கிறார் கள்.

'எனவே, அந்த மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்த உடனடி மனிதாபிமானப் பணிகள் மேற்கொள் ளப்படவேண்டும்' - என்றார் சி.இளம் பரிதி.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

இலங்கை அரசால் யுத்தம் ஒன்று எங்கள் மீது மீண்டும் திணிக்கப்படப் போகின்றது. எமது மக்களின் உரி மைகள் வென்றெடுக்கப்படவேண் டும் என்ற காரணத்தால் எங்களுடைய தலைவர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

அந்த நிலைமை எந்தளவுக்கு வளர்ந்துள்ளது என்பதைச் சிந்தித் துப் பாருங்கள்.

துப்பாக்கி முனையிலே போராட் டத்தைக் கூர்மைப்படுத்திய விடு தலைப் புலிகளின் தியாகத்தின் கார ணமாக இந்த அரசு பேச்சுக்கு நிர்ப் பந்திக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் அரசாங்கத் தின் பொருளாதாரத்தை வீழ்ச்சி யடையவைத்த காரணத்தால் இந்த அரசு பேசியே ஆகவேண்டும் என்று வந்து நிற்கின்றது.

கடந்த காலங்களில் மாறிமாறி ஆட்சி நடத்திய அரசுகள் தமிழ்ச் சமூகத்தை ஏமாற்றிய வரலாறுதான் உள்ளது. அதே நிலைமைதான் இன்று தொடர்கிறது.

ஆயுதங்களால் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய வைத்த விடுதலைப் புலிகளின் பேராட்டம் காரணமாக அரசு பேசியே ஆகவேண்டும் என்ற இக்கட்டுநிலை ஏற்பட்டது. ஆனால், ஒப்பந்தத்தினால் ஒன்றரை வருடங் களாகப் போர்நிறுத்தம் ஏற்பட்டது மட்டுமே பயனாகியுள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்பு இந்த அரசு விடுதலைப் புலி களை ஏமாற்றிவிடலாம் என்று நினைத்தது. பேச்சு என்ற போர்வை யில் விடுதலைப் புலிகளைப் பல கோணங்களில் அரசு ஏமாற்றப்பார்க் கின்றது.

கடந்தகால வரலாறுகளின் ஊடாக இதனை விடுதலைப் புலிகள் முன்ன தாகவே உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

யாழ். குடாநாட்டில் இராணுவ ஆக்கிரமிப்புகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. தமிழ் மக்களுக்கு நியாய மான தீர்வு கொடுக்கப்படவேண்டும் என்று வெளிநாடுகள் அனைத்தும் வேண்டி நிற்கின்றன.

ஆனால், தென்னிலங்கையில் உள்ள சக்திகள் தமிழ் மக்களுடைய உரிமைகளைத் தரமாட்டார்கள் என் பது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விடயங்களைப் பார்க்கும்போது தெரி கின்றது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக் களின் உரிமைகளைத் தென்னிலங் கையில் உள்ள அரசியல்வாதி களால் கொடுக்கமுடியாது; கொடுக் கவும் மாட்டார்கள் என்பதை நாம் தெளிவாக உணரமுடிகிறது - என் றார் அடைக்கலநாதன். (ஒ-4-ரி)

### மந்துவில் திருட்டு வழக்கில்

# தென்மராட்சிக்குள் அவசியமின்றி நுழைய சந்தேக நபர்களுக்குத் தடை!

## சாவகச்சேரி நீதிமன்றம் விதித்தது

தென்மராட்சி,ஜூலை27

மந்துவில் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேக நபர்களையும் பிணையில் செல்ல அனுமதித்த சாவகச்சேரி நீதிவான், மறு உத்தரவு நீதிமன்றினால் பிறப்பிக்கப்படும்வரை நீதிமன்ற வழக்குத் தவிர்த்து எந்த வொரு காரணம் கொண்டும் தென்ம ராட்சிப் பிரதேசத்திற்குள் அவர்கள் நுழையக்கூடாது என கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த வியாழக்கிழமை நீதிமன் றில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபர் களான செல்லையா தர்மராசா, தெய் வேந்திரகுமார் இந்திரகுமார் ஆகிய இருவரையும் தலா 10ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் நீதிமன்றினால் ஏற்கக்கூடிய தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணை யிலும் செல்ல நீதிவான் அனுமதித் தார்.

அதேவேளை - மேற்கண்ட நிபந் தனையுடன் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் கையொப்ப மிடப்படவேண்டுமெனவும், நீதிமன் றின் அனுமதியின்றி நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது எனவும், முறைப் பாட்டுக்காரர், சாட்சிகள் ஆகியோரை மிரட்டும் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது எனவும் நீதிவான் உத்தர விட்டார்.

(ஒ-117)

# இளவாலைத் தவறணையை இடம்மாற்றக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜூலை27

இளவாலையிலுள்ள பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கள்ளுத் தவ றணையை அங்கிருந்து வேறு இடத் திற்கு அகற்றுமாறு அப்பகுதி மக் களும் மற்றும் பொதுநல அமைப்பு களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இங்குள்ள தேவாலயம் ஒன்றிற்கு மிகச் சமீபமாக இந்தக் கள்ளுத் தவறணை இருப்பதாலும் கள் அருந் திப் போதைக்கு உள்ளானவர்களால் அடிக்கடி அப்பகுதியில் அமைதி யின்மை மற்றும் சச்சரவுகள் ஏற்படு வதாகவும் இக்கள்ளுத் தவறணையை இடம்மாற்றும்படி கோரப்பட்டுள்ளது.

இந்தத் தவறணையை பொது மக்களின் நலன்கருதி அங்கிருந்து வேறு இடத்திற்கு இடம்மாற்றம் செய் யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் மூலம் வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிர தேச செயலருக்கும் இந்த மகஜரின் பிரதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ஒ-135)

## அரசியல் மோதல்; இருவர் கைது!

கொழும்பு,ஜூலை27

ஆனமடுவ தலாகொலவ பகுதி யில் இடம்பெற்ற அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக பொ.ஐ. முன்னணி ஆதரவாளர்கள் இருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப் பட்டனர்.

கடந்த 22ஆம் திகதி இடம் பெற்ற இந்த மோதலின்போது ஐதேக. ஆதரவாளர்கள் இருவர் காயமடைந் துள்ள அதேவேளை, பொ.ஐ.மு. ஆதர வாளர்களின் வர்த்தக நிலையங்கள் மூன்றும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

(ஒ)

## வெங்காய அறுவடை ஆரம்பமானது

சண்டிலிப்பாய்,ஜூலை27

பண்டத்தரிப்பு, மாதகல், பெரிய விளான் ஆகிய பகுதிகளில் வைகா சிப் போக வெங்காயச் செய்கையின் அறுவடை தற்போது நடைபெற்று வருகின்றது.

இம்முறை அதிக எண்ணிக்கை யிலான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

வியாபாரிகள் விவசாயிகளிடம் நேரில்வந்து வெங்காயத்தைக் கொள் வனவு செய்து கொழும்புக்கும் நாட் டின் ஏனைய பகுதிகளுக்கும் அனுப்பி வருவதை அவதானிக்கமுடிகின்றது.

(ஒ-135)

## லயன்ஸ்கழக நிர்வாகிகள் பதவியேற்பு

சண்டிலிப்பாய்,ஜூலை27

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தின் 2003-2004ஆம் வருட புதிய நிர்வாக சபையின் உத்தியோகபூர்வ பதவியேற்பு வைபவம் இன்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு சித் தன்கேணி வட்டுக்கோட்டை வீதி யிலுள்ள கழகத்தின் "வட்டு - தொண் டையம்" தொழிற்பயிற்சி நிலைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது. கழ கத் தலைவரும், இலங்கை மின் சாரசபையின் மாகாணப் பொறியி யலாளருமான லயன் வி.வேலுப் பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக வலயத் தலைவர் லயன் டாக்டர் எஸ்.சதாசிவம் கலந்துகொள்வார்.

(ஒ-135)

# நூல்வரிசை





நூல்: நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள்

ஆசிரியர்: பாலசுப்பிரமணியம் தனபாலன்

கற்பவர்களின் பன்முகப்பாங்கு அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், ஒவ்வொரு கற்பவரையும் தழுவிச் செல்லும் வகையில் கற்பித்தலை ஒழுங்கமைத்தல் வேண்டும். ஆசிரியர் ஒரு தொழில்நுட்பவியலாளர் என்ற மரபு வழிநிலை மாறுபட்டு ஆசிரியர் இணைந்து கற்போராய் (Colearners) படிமலர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளனர். இந்த வளர்ச்சியின் புதிய பரிமாணங்கள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களது வாண்மை முன்னேற்றப் படிநிலைகளான ஆசிரிய வாண் மையைத் தக்கவைக்கும் நிலை (SURUIVALST AGE), செயற்பணிகளை வினைத்திறன்படுத்தும் நிலை (TASK STAGE), ஒவ்வொரு மாணவர்மீதும் நிறைவான அறிவூட்டல் மேற்கொள்ளும் நிலை (IMPACT STAGE) ஆகிய அனைத்திற்கும் பயன்படக் கூடிய அகல்விரிவாக்கமாக இந்நூல் அமைந்துள்ளது. புதிய கற்பித்தல் முறையியல்களின் சிறப்பார்ந்த பண்பாக அமைவது மாணவரிடத்து உசாவல் விருப்பை (EURIOSITY) தூண்டி விடுதலாகும். இந்த உசாவல் விருப்பைக் கற்போரிடத்தே தூண்டும் நூல் உபாயங்கள் அடங்கிய முறையியல்கள் இந்நூலில் அடக்கப்பட்டிருத்தல் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பிறிதொரு பண்பாகும்.

பேராசிரியர் சபா.ஜெயராசா



நூல்: ஆசிரியத்துள் நான்

ஆசிரியர்: இராஜேஸ்வரி கொன்ஸ்ரன்ரைன்

வெளியீடு: நேயோ கலாசாரக்கழகம், யாழ்ப்பாணம்.

மூன்று தசாப்த காலங்களை 'ஆசிரியத்துள் நான்' ஆகக் கழித்து விட்ட ஒரு வழிகாட்டியின் வழித்தடங்களின் பதிவுகள் இவை எனக் கூறலாம்.

உண்மையான சுயவிமர்சனம் என்பது வரலாற்றுப் பாதையைச் செப்ப னிடலும், புதிய பாதையை ஒழுங்கமைத்தலும்தான். அவை இதில் பேசப் பட்டுள்ள விதம் 'இலக்கியப் பரிசோதனை' போல் படிப்போர் இதயங்களை அதிரவைக்கப் போகிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

யாழ்.பிரதேசக் கல்வி வரலாற்றின் இடர்க்கால ஒருசில மாதங்களின் நிர்வாக நடப்புகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

எதிர்கால கல்வி வரலாற்றாசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் இங்கு வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் மிகமிகப் பயனளிக்கும். அதேபோல சமூக வியலாளருக்கான பலதகவல்களும் காணப்படுகின்றன.

திறந்த விரிந்த உள்ளத்திலின்றும் வெளிவந்திருக்கும் இவை, நம்பகர மானவை. நாளைய கல்வி கற்பிப்போருக்கும், கற்போருக்கும் ஒளிகாட்டும் வெளிச்சத் துணுக்குகள்.

காட்டப்பட்டுள்ள காட்சிகளும், கருத்துக்களும், கடந்தகாலச் சம்பவங் களும் - மனித குலத்தின் சிந்தனைகள் அமைதிக் காலத்திலும், போர்க் காலத்திலும் எவ்வெவ்வழிகளில் சுடரேற்றுகின்றன என்பதனைப் படிப் போர் மனதில் வரிகளோட வைக்கின்றன. இங்கு - மாணவர்க்கும் கற்பித்தல் நிகழ்கிறது.

கல்வி நிர்வாகிகளுக்கும் வழிகாட்டல் நிகழ்கிறது.

கல்வியின் புதிய பாதைகள் பற்றிய தெரிவு, தரம் காட்டப்படுகின்றன. அதேவேளையில், ஆத்ம பரிசோதனையும் நடக்கிறது.

செம்பியன்செல்வன்.

# இயேசுவை தீர்ப்பிடும் அநியாய தராசு

பலசரக்கு கடை ஒன்றில் தரா சில் பொருள்களை ஏற்றும் போதெல் லாம் தட்டு ஒரு பக்கம் சாய்ந்தது. படிக்கல் இருக்கும் தட்டு மேலேயே நின்றது. உருளைக்கிழங்குகளும் வெங்காயங்களும் இதை உற்றுக் கவ னித்தன.

இது ஒரு கொடுமை என்றது உருளைக்கிழங்கு.

வெங்காயம் வெகுளியில் சொன் னது: இது ஒரு பச்சைத் திருட்டு. இரண்டும் சேர்ந்து குரலெழுப்பின. தராசை முதலில் எடைபோடு. அந்த உலகமே இப்படித்தான் முரண்பாடு களால் மூச்சுத்திணறும். உலகில் போதிமரத்தைப் புகழ்வார்கள். புத்த னைப் புதைத்து விடுவார்கள்.

சிலைகளை வைப்பார்கள். சித் தாந்தங்களை மறந்துவிடுவார்கள். தேசத்தைக் கொளுத்திவிட்டு கொடி களைக் காப்பாற்றுவார்கள்.

அதுபோலவே இயேசுவைக் கொன்றோம்.சிலுவையை வழிபடுகி றோம். தீர்ப்புச் சொல்ல வேண்டியவர் கடவுள். ஆனால், குற்றவாளிக் கூண் டில் அவர். இயேசுவுக்கு மரணத்தீர்ப்பு.

இந்தத் தீர்ப்பு நம்மால் வந்தது. ஈடுபட வேண்டியவர்கள் சமூதாயத்தை விட்டு ஒதுங்கி நின்றதால் வந்த அநி யாயத் தீர்ப்பு.

கண்ணுக்குமுன் கொடுமை நடந் தாலும் கண்டு கொள்ளாமல் நாம் இருக்கிறோம்.


அந்த உருளைக்கிழங்குக்கு இருந்த உறுத்தல் நம்மிடம் இல்லை.

இந்த வெங்காயத்துக்கு இருந்த துணிச்சல் துளியும் நம்மிடம் இல்லை. எனவே இயேசு குற்றவாளியாகிறார்.

இயேசு மட்டுமல்ல, அநியாயங்

### ஞாயிறு நற்பிரசாதம்

களால் பாதிக்கப்பட்ட அத்தனை பேரும் மலைபிளந்து, கல் உடைத்து, கழனி உழுது, மரம் அறுத்து, வழி அமைத்து, வாடிக்கையாய் உள்ளம் உடைந்து, வாழ்வெல்லாம் துன்பம் அடைந்து, வியர்வையில் மேனி கரைந்து, வெயிலில் அழகு குலைந்து, பசியில் பலமும் குறைந்து, பாடுபட்டு முதுகும் வளைந்து தாங்காத துய ரில் வாழும் மக்கள் பலர் இன்று அநியாயமாய் தீர்ப்பிடப்படுகிறார்கள். நாமும் கூட்டத்தோடு சேர்ந்து கூச்



சல் போடுகிறோம்.

அவர்கள் அப்படித்தான் என்ன தான் உதவினாலும் முன்னுக்கு வரமாட்டார்கள். அது கடவுளின் சித் தம்.

வாழ்க்கையின் நியதி. அது அவர் களின் தலைவிதி.... இப்படியெல் லாம் எத்தனையோ தீர்புக்கள்.

மனிதத்திற்கெதிரான, தர்மத்திற் கெதிரான தீர்புக்களைத் திருத்தி எழுதவே இயேசு அந்த அநியாயத் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறார்.

இனியும் இயேசுவை நாம் தீர்ப் பிடவேண்டாம், தீமையை ஏற்கவேண் டாம், தீமையை வளர்க்கும் தராசு களை எடைபோடுவோம்.

(நன்றி - பாதுகாவலன்)

# பொருளாதாரத்தை பாதிக்காதவாறு அரச ஊழியருக்கு சம்பள உயர்வு

## அரசு ஆராய்வதாக நிதி அமைச்சர் தகவல்

கொழும்பு,ஜூலை27

நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக காத வகையில் அரசாங்க ஊழியர் களின் சம்பளத்தை எவ்வாறு உயர்த் தலாம் என்பது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாக நிதி அமைச் சர் கே.என்.சொக்ஸி தெரிவித் துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன் றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச ஊழியர்களுக்கு ஆகக் கூடு தலான சம்பள உயர்வினை வழங்கு வது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

அதேவேளை, பொருளாதாரத்தை பாதிக்காத வகையிலும் அரச ஊழி யர்களுக்கு நன்மையளிக்கும் விதத் திலும் அந்த சம்பள உயர்வை எவ் வாறு வழங்குவது என்பது குறித்தும் கவனம் செலுத்தப்படுகிறது. பொ.ஐ. முன்னணி அரசின் காலத்தில் இடம் பெற்றது போல இது ஓர் அரசியல் லாபத்தை அடையும் நோக்குடையதாக இருக்காது.

- இவ்வாறு நிதி அமைச்சர் தெரிவித தார். (ஐ-4)


**இணையத்தளம்**

உங்கள் கதைகள், கவி தைகள், கட்டுரைகளை இணையத்தில் பாதுகாத்துக் கொள்ள YARL.Com (தமிழ் வெப்தளம்).

தொடர்புகளுக்கு:

YARL.Com, HAUKETOVEI SC LEIL 51 1266, OSLO, NORWAY.

(20489) (21-11-15)

**கணக்காளர் தேவை**

A/L கணக்கியல் படித்த (வியாபார ஸ்தாபன கணக்கு பதிவதற்கு) ஆள் தேவை. (வயது 27-40)

தொடர்பு:-

55, 57, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.

(20717) (21-11-15)26)

**படிவம்**

2004ஆம் ஆண்டுக்கு பாட சாலைச் சீருடைகளைப் பெற் றுக்கொள்வதற்கான விண் ணப்பப்படிவம் உண்டு.

விண்ணப்ப முடிவு திகதி: 31-08-2003

BHARATHI PATHIPPAKAM AND OFFSET PRINTERS

430, K.K.S. ROAD, JAFFNA.

(சி-29133)(21-11-15)

**STUDY IN INDIA**

A/L சித்தியடைந்தவர்களும், 2003 ஆண்டு A/L பரீட்சை எழுதியவர்களும், O/L சித்தியடைந்தவர்களும் இந்தியாவில் Bangalore University, Anna University, Periyar University ஆகிய பல்கலைக்கழகங்களின் பட்டதாரியாக வாய்ப்பு

**Available Courses**

Engineering, Electronics, Communication, Mechanical, IT, B.Sc Micro Biology, Genetics, Computer Science, BBM, BBA, BCA, B.Com, and Diploma Courses, மற்றும் பாட நெறிகள்

*Admission, Visa and Hostel arrangements* செய்து கொடுக்கப்படும்

Become a World Recognized GRADUATE

எமது நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட 50ற்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலதிக விபரங்களை **யாழ்ப்பாணத்தில்** பெற்றுக்கொள்ள



IPAS- Institute of Professional Accounting Studies

199, Main Street, Jaffna. Tel: 0777-563292

Affiliated to

SCHOLARS INFORMATION CENTER

2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06. Tel: 074- 512 561

S.K.Ads

**பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்கம்**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது சங்க இயக்குநர் சபை உறுப்பினர்

**திரு.கணபதிப்பிள்ளை கந்தசாமி**

சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளமைக்காக அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு. (சி-29122)(21-11-15)




**கண்ணீர் அஞ்சலி**

எமது வித்தியாலய ஆசிரியை

திருமதி சிவகலை ஶ்ரீரங்கன்

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி ஏகாம்பரம் ஞானம்மா**

அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


- ஆசிரியர் கழகம்.

யா/கோப்பாய்கோமம் அரசினர் வித்தியாலயம். (20736) (21-11-15-26)

**66ஆவது பிறந்த நாளில் இரு விழிகளும் இமைக்க மறந்த**

**ஆறாம் மாத நினைவலைகள்**

அன்னையின் அணைப்பில் 27 - 07 - 1937



ஆண்டவன் அரவணைப்பில் 21 - 01 - 2003

**அமரர் துரையப்பா துரைரத்தினம்**

திதி: 17-07-2003

வாழ்ந்திருந்த காலமெல்லாம் வசந்தம்
தவழவிட்டு வாழ்ந்தது போதுமென்றோ
வானுலகம் சென்றீர்கள்?
எங்களுக்கு இந்நிலை வரும் என்று
எள்ளளவும் எண்ணவில்லை
சாவு உங்களை நெருங்கும் என்று
சற்றும் நாம் நினைக்கவில்லை
தெய்வமாக நின்று எம்மை நீங்கள்தான்
வழி நடத்த வேண்டும் அப்பா!

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'கஜமுக வாசா' சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு. (20711) (21-19-11-15)




காலம் காலமாக
இளம் சருமம் பெற
கிரீம், லோஷன்
உபயோகியுங்கள், இல்லையேல்
மெடிமிக்ஸில் குளியுங்கள்.

காலங்காலமாய் சருமத்தை
இளமையாக, பொலிவாக,
ஆரோக்கியமாக
வைத்திருப்பதற்கான இரகசியம்
ஆயுர்வேதத்திலுள்ளது.
இதே ஃபார்முலா மெடிமிக்ஸ்
ஆயுர்வேதிக் சோப்பில் உள்ளது.
இது 18 சக்திவாய்ந்த மூலிகைகள்
மற்றும் தேங்காய் எண்ணெயின்
நற்குணங்கள் நிறைந்த,
கைகளால் தயாரிக்கப்பட்ட
ஒப்பற்ற கலவையாகும்.
மெடிமிக்ஸில் குளியுங்கள்,
உங்கள் சருமம், முகப்பரு, மாசு,
வெயில், சோர்வு
போன்றவையை எதிர்க்கும்,
அதோடு காலம் காலமாய் நீடித்த
பொலிவைத் தரும்.



மெடிமிக்ஸ் ஆயுர்வேதிக் சோப்
சருமத்தை இளமையாக
வைத்திருக்கும் என்றென்றும்

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சந். சனி |
| செ. | இராசிச் சக்கரம் | | சூ. வெ. |
| | | | வியா. புதன் |
| | கே. | | |

# இந்த வார இராசி பலன்

## 27-07-2003 - 02-08-2003

### மாற்றம்:

திருவாதிரை - சந்திரன், மிதுனம் இராசியில் நிற்கும். பேச்சுக்கள் தொடரும். பழையபடி நிலைப்பாடுகள் மெல்ல மெல்ல மாறும். நடந்துவந்த பாதையை எல்லோரும் திரும்பிப் பார்ப்பார்கள். தெற்கு அரசியல்வாதிகள் மாறி மாறித் திசை மாறுவார்கள். இந்தியாவில் வன்முறைகள் திட்டமிடப்படும். மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றநிலை உருவாகும். மேற்கு நாடுகள் அடிக்கடி மாநாடுகள் நடத்தும். இந்துசமுத்திரக் காற்றழுத்தம் மேலிடும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

திருமணப் பொருத்தத்தில் பலவிதமாக, சோதிடர்கள் கிரக பாவத்தைப் பார்த்து கண்டபடி கணிக்கின்றார்கள். சோதிடர்களுக்குத் திடமான அறிவு வேண்டும். தொழிலில் புத்திசாதுரியப் பேச்சு, புதியநடைமுறை, பண வரவு, நண்பர்கள் உறவிகள் எதையும் ஏற்றுக்கொள்ளாத நிலைமை. தலைநோ, விக்கம், அமைதியற்ற தன்மை தோன்றும். வியாபாரிகள், சங்கீதத்துறை தொடர்பானவர்கள், தோட்டக்காரர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி.*

### இடபம்

ஓர் இலக்கை அடைய எல்லோராலும் முடிவதில்லை. போராட்ட வாழ்வு தொடரும். உறவினர் வருகை, வருமானம் குறையும். செலவுகள் அதிகரிக்கும். அடிக்கடி சலிப்பு, கூடாத நட்பு, பிறருக்குத் துன்பம் செய்வீர்கள். அடிக்கடி வயிற்றுவருத்தம், சளி, நெஞ்சில் நோ என்பன வரும். எதிலும் ஓர் அலட்சியப்போக்கு இருக்கும் நிலைப்பாடு. வியாபாரிகளுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி.*

### மிதுனம்

நமது நாட்டிற்கு ஏற்ற முறையில் பூமியில் மண், கடலின் தன்மை, வீசும் காற்று இயல்பு நிலைப்படி தான் நமது வீடுகளை அமைக்க வேண்டும். விதிமுறை அளவுப் பிரமாணம் முக்கியம். தொழில்ஸ்தானத்தில் சட்டதிட்டப்படி நடத்தல், அழகுபடுத்தச் செலவு செய்தல், தந்திரப்போக்கு, அடிக்கடி இடமாற்றம், கொடுத்த பொருள்வராது. தூரத்துச் செய்திகளால் மனக்கஷ்டம். கண்நோ, சளி வருத்தம், ஆஸ்பத்திரி செல்லுதல் போன்றனவும், வாகனசுகமும் இருக்கும். ஆசிரியர்கள் நன்மைகள் பெறுவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி மத்தியானம்.*

### கடகம்

உலகத்தவர் உங்களைக் கண்டு தலையாட்டுகிறார்கள் என்றால் உங்களிடம் அவர்களை விட ஏதோ ஒன்று பெரிதாக இருக்க வேண்டும். பொருளா? கல்வியா? வீரமா? என்பது விதியைப் பொறுத்தது. போராட்ட உணர்வு தொழில்ஸ்தானத்தில் வெற்றி தரும். பொருள வரும். பெரியவர்கள் உதவுவார்கள். நண்பர்கள் குறைகூறுவார்கள். ஆலயத் திருப்பணி, பிரயாணம், இடமாற்றம், பெற்றோர், சகோதரங்களுக்கு உதவுதல், சல வருத்தம், வாய்வுத் தொல்லை என்பன வரும். வியாபாரிகள், அரசியல்வாதிகள் உதவிகள் கிடைத்து முன்னேறுவர்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்.*

### சிங்கம்

பிடிவாதமாக இருந்து காரியம் சாதிப்பீர்கள். பல புதிய பொறுப்புகள் தேடிவரும். தொழிலில் நல்ல பெயர் வரும். இடமாற்றங்கள் சகஜம். உடல் நிலைத் தாக்கம், உஷ்ணபீடைகள் கொடுக்கும். எவரையும் காப்பாற்றும் ஆற்றல் கொண்ட நீங்கள் பிறரின் ஆபத்துக்களிலிருந்து பிறரை மீட்டெழுப்புவீர்கள். மருந்துத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரிகள் போன்றவர்களுக்கு மாற்றங்களும், சிறப்புகளும் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்.*

### கன்னி

உலகில் தகுதிக்குத் தகுந்த மாதிரி உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். கிடைப்பது கிடையாதது உங்கள் குறிப்பில் உள்ள கிரகங்களைப் பொறுத்ததாகும். வரவுக்கு மீறிச் செலவு செய்தபடி இருப்பீர்கள். புதிய இடமாற்றங்கள் கொடுக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். ஆனால், உபத்திரங்களும் கொடுப்பார்கள். தூர இடங்களுக்கு போக வேண்டாம். இழப்புகள், ஏமாற்றங்கள் ஏற்படும். சங்கீதம், செய்தித் தொடர்பாளர், குருத்தொழில் செய்பவர்கள் அதிக இலாபங்களை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### துலாம்

குரு பதினொராம் ஸ்தானத்தில் வந்துள்ளதால் புதிய பொருள்கள் வரும். புத்திரர் கல்விச் சிறப்பு ஏற்படும். பொருளால் பூரிப்பு அடைவீர்கள். இடமாற்றங்களால் விரயங்கள் ஏற்படும். தெய்வ வழிபாடு முக்கியமாகும். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யுங்கள். சூரியன் பத்தில் இருப்பதனால் தொழில்ஸ்தானத்தில் பெரியவர்களின் உதவிகளும், நன்மைகளும் கிடைக்கும். உஷ்ணபீடைகள், கொடுக்கும். குருத்துறை, வியாபாரிகள், தோட்டங்கள் தொடர்பானவர்கள் நன்மை, பொருள்வரவு அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

குறுகிய வட்டத்தில் பெரிய பலனை உங்கள் முயற்சி மூலம் அடைய முயற்சிப்பீர்கள். புதன், வியாழக்கிரகங்கள் நன்மைகளைச் செய்யும். இராகு, கேது தாக்கத்தால் அடிக்கடி உங்கள் மனம்மாறி பல இழப்புகளைச் சந்திப்பீர்கள். இனஜனங்களை தூக்கியெறிந்து பேசுவதனால் அவர்கள் தூரத்தே நிற்பார்கள். தொழில் முயற்சி வெற்றி தரும். புதியவர்கள் உதவுவார்கள். உஷ்ணபீடைகள், பித்தக் கொதிப்பு, வாய்வுத் தொல்லை தரும். வியாபாரிகளுக்கு நல்ல எதிர்கால ஆரம்பத் திட்டங்கள் வெற்றி தரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### தனுசு

தாய் வழியினருக்கு நல்லதல்ல. தாயார் இருப்பவர்களுக்கு தாய்க்கு வாத விறைப்புக்கு வைத்தியம் செய்வீர்கள். பொருள் வரவில் கண்ணாக இருக்க குரு, புதன் சேர்க்கை உதவி செய்யும். இரகசியமாக இருந்து புதிய திட்டங்களைத் தீட்டுங்கள். பக்கத்தில் இருப்பவர்களை நம்பாதீர்கள். இங்கொன்றும் அங்கொன்றும் சொல்லி உங்களைப் பலவீனப்படுத்துவார்கள். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். இனஜன அபிப்பிராய பேதத்தை நீக்க முயலுவீர்கள். திருப்பணிகள் செய்வீர்கள். பெரியவர்கள் உதவுவார்கள். கால், வயிறு, உளைவு, நோ கொடுக்கும். குருத்தொழில், வியாபாரிகள், பிரயாணத் துறையினர்கள் புதிய திட்டத்தால் நன்மை அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

### மகரம்

பழையன கழிதலும் புதியவை புகுதலும் உங்கள் நிலைப்பாட்டில் வரும். பெரியவர்கள் உதவுவார்கள். பொருள் செலவுகள் அதிகரிக்கும். தாயாருக்கு உடல்நிலை பாதிப்பு வரலாம். வாக்குவாதப்படாதீர்கள். உங்களைப் பற்றி அயலவர்கள் கோள் சொல்லி உங்களைப் பலவீனப்படுத்துவார்கள். பொருள் ஒன்றைக் கொடுத்து பகையைத் தேடச் சந்தர்ப்பம் ஏற்படலாம். கால்ப்பிடிப்பு, நரம்புச்சோர்வு, களைப்பு வரும். சூரிய பார்வை தெய்வ வழிபாட்டிற்கு வழி செய்யும். பாதுகாப்புத்துறை, குருத்தொழில், வைத்தியத் துறையினர்களுக்கு அதிக நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

### கும்பம்

ஏன் கொதிக்கின்றீர்கள். நாற்பது வருஷமாக இந்தத் தொழிலைத்தானே செய்கின்றீர்கள். அலுத்துச் சலிக்காதீர்கள். விதிவிட்டவழி நடந்து சென்று கடந்து போவீர்கள். மனைவி, மந்திரி போன்றவர்களின் ஆலோசனைகளை அலட்சியம் செய்யாதீர்கள். அவர்கள் நன்மைகளைச் சொல்லுவார்கள். பிரயாணங்களைத் தவிர்க்கவும். புதிய பொறுப்பு, பணவரவு இருக்கும். புத்திரர்கள் சனீஸ்வரனால் அடிக்கடி காசு கேட்டுப் பயப்படுத்துவார்கள். தகப்பன் வழி, சகோதரர்களுடன் வாக்குவாதப்பட இடமுண்டு. தெய்வவழிபாடு, திருப்பணி சகஜம். கால்வருத்தம், வயிற்றுக்குழப்பங்கள் ஏற்படும். குருத்துறை, பாதுகாப்புத்துறை, அரசியல்துறை போன்ற துறையினர் புதிய உருவாக்கங்களைச் செயற்படுத்தி நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன்.*

### மீனம்

உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? உங்கள் நிலைப்பாட்டிற்குத் தகுந்ததாகச் செயற்படுங்கள். காசை காட்டி உங்கள் காணி பூமியைச் சிலர் பொறுப்புக் கேட்கலாம். வீடு மனையில் மாற்றம். புத்திரர், சகோதரங்களால் செலவுகள் அதிகரித்தல், பொருள் வரவு, இனஜன வருகை, மனப்பதற்றநிலை, புதியதிட்டம் தாமதமடைதல், பொருள் இழப்பு, களவு போதல் போன்றவை நடக்கலாம். மாணவர்களுக்கு மாற்றங்கள் நடக்கும். உடல் நிலையில் கால்நோ, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். வியாபாரிகள், தோட்டவேலை, குருத்தொழில் போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன்.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# வானொலி நாடகங்களில் இருந்து சிறுகதை எவ்வாறு வேறுபடுகின்றது?

**அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை**

வானொலி நாடகங்களை எல்லோரும் கேட்கின்றனர். எழுத்தாற்றல் உள்ளவர்கள் எல்லோரும் அதை எழுத முயற்சிக்கின்றனர். என்னிடம் கூடப் பலர் கேட்கின்றனர், வானொலி நாடகம் எப்படி எழுதுவது என்று. என்னால் எல்லோருக்கும் உதவ முடியவில்லை. நல்ல நாடகங்களை எழுதும் கலை இலகுவில் கை வந்து விடாது. அதற்கு நாடகம் பற்றிய நிறைந்த அறிவும் நல்ல அனுபவமும் உதவி செய்யும். பிறக; வானொலி நாடகம் எழுதுவதில் சில கலை நுணுக்கங்கள் (Techniques) உள்ளன. அவற்றைக் கற்றுக்கொண்டால் எழுத்தாற்றல் உள்ளவர்கள் வானொலி நாடகங்கள் எழுதமுடியும்.

வானொலி நாடகத்தின் முக்கிய அம்சங்களை (Salient Features) மட்டும் எடுத்துக் கூறுவதை விட அந்த இலக்கிய வடிவத்தை சிறு கதையுடன் ஒப்பிட்டுக் காட்டினால், வானொலி நாடகமும் விளங்கும் சிறுகதையும் விளங்கும்

எழுதப்படுபவை எல்லாமே சிறந்த கதைகளுமல்ல; சிறந்த வானொலி நாடகங்களுமல்ல. மோசமானவையும் எழுதப்படுகின்றன. சிறந்த சிறுகதைகளையும் சிறந்த வானொலி நாடகங்களையும் கருத்தில் கொண்டே இந்தக் கட்டுரையை வரைகிறேன்.

எனது 335 நாடகங்களை இலங்கை வானொலி ஒலிபரப்பியிருக்கிறது. இலங்கைப் பத்திரிகைகள் எனது 60 சிறு கதைகளைப் பிரசுரித்திருக்கின்றன. எனவே, இந்தக் கட்டுரையை எழுதுவதற்கு எனக்கு எல்லாத்தகுதியும் உண்டு. நீங்கள் இந்தக் கட்டுரையை வாசித்தால் அது உங்களுக்கு நிச்சயம் வழி காட்டும்.

### வடிவம்

சிறுகதைக்கு ஒரு குறிப்பிட்ட வடிவம் இல்லை. எழுத்தாளன் கொடுப்பதுதான் அதன் வடிவம். குறிப்பிட்ட நேரத்திற்கு ஒலிக்கும் வானொலி நாடகத்திற்கு அநதந்த நேரங்களுக்கேற்ப வடிவங்கள் கொடுத்தே ஆக வேண்டும்.

### கதை

சிறுகதையில் ஒரு சிறிய கதையாவது இருக்கும். கதையே இல்லாத சிறுகதைகளும் எழுதப்பட்டிருக்கினறன. வானொலி நாடகத்தில் கட்டாயமாக ஒரு கதை இருக்க வேண்டும். கதைதான் நாடகமாக்கப்படுகிறது.

சிறுகதையில் ஒரு கதை மட்டும் தான் வரும். இரண்டாவது கதைக்கு அதில் இடமில்லை. அதற்கு ஓர் இலக்குத்தான் உண்டு. அந்த இலக்கை நோக்கியே எழுத்தாளன் கதையை வேகமாக நகர்த்திச் செல்வான். வானொலி நாடகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளும் வரலாம். பல கதைகள் வந்தால் தானே நீண்ட நேரம் நாடகத்தை ஓடச் செய்யலாம் பல கதைகள் வருவதால் குழப்பமும் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நாடகம் பல தாக்கங்களையும் ஏற்படுத்தும். பல கதைகளையும் சொல்லி ஒன்றுக்கு மேற்பட்ட தாக்கங்களையும் ஏற்படுத்திய ஒரு நாடகத்தைக் கேட்டு முடிக்கும் பொழுது உலகத்தைப் பார்த்த திருப்தி ஏற்படும்.

சமகாலக் கதைகளிலேயே மக்களுக்கு ஆர்வம் அதிகம். இன்று எழுதப்படுகின்ற தொண்ணூற்றொம்பது சதவீதச் சிறுகதைகளும், எங்களது சமகால வாழ்க்கையையே சித்திரிக்கின்றன. இந்திய வானொலி நிலையங்கள் பல வகையான நாடகங்களையும் ஒலிபரப்புகின்றன. ஆனால், இலங்கை வானொலி இந்நாட்டு மக்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்களையே அதிகமாக ஒலிபரப்புகின்றது. அவற்றில்தான் புதுமையும் நம்பகத்தன்மையும் இருக்கின்றன. அவற்றின் மூலமே மக்களுக்கு வேண்டிய நல்ல செய்திகளையும் இலகுவாகக் கூறலாம்.

### கதைப்பின்னல்

கதை, கதைப்பின்னலாக (Plot) மாற்றி அமைக்கப்பட வேண்டும். சிறுகதையில் ஒரு மெல்லிய கதைப் பின்னல் இருக்கும். கதைப்பின்னலே இல்லாத சிறுகதைகளும் உண்டு. வானொலி நாடகத்தில் கதைப்பின்னல் கட்டாயம் இருக்க வேண்டும். அது பின்பு காட்சிகளாக மாற்றப்படும். இல்லையென்றால் நாடகம் வளர்ந்து செல்லாது. அது கேட்போரைக் கவர்ந்திழுக்கவும் செய்யாது.

### மோதல்

கதைப்பின்னலுடன் நெருங்கிய தொடர்புடையது மோதல். (Conflict) அநேகமான சிறுகதைகளில் ஒரு மோதல் இருக்கும். மோதலே இல்லாத சிறுகதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. வானொலி நாடகத்தில் கட்டாயமாக ஒரு மோதல் இருக்க வேண்டும். மோதல் இல்லாவிட்டால் நாடகமே இல்லையே! அதிலும் வானொலி நாடகத்தில் மோதல் இல்லையாயின் அதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் தூங்கிவிடுவர். மோதல் வந்தால்தான் நாடகத்தில் சூடு பிடிக்கும். அலையும் ஏறும். அந்த மோதலில் சில திருப்பங்களும் வர வேண்டும். கதைப் பின்னல்தான் மோதல். அதுவே நேயர்களை இறுதிவரை நாடகத்தைக் கேட்கச் செய்கிறது.

### விறுவிறுப்பு

இரண்டிலும் விறுவிறுப்பு இருப்பது அவசியம். சிறுகதை சிறியதாதலால் அதில் சின்ன விறுவிறுப்பே இருக்கும். நாடகத்தில் கடும் விறுவிறுப்பு இருக்கவேண்டும். விறுவிறுப்பில்லாவிட்டாலும் சிறுகதையைச் சிலர் வாசிப்பர். நாடகத்தில் விறுவிறுப்பு இல்லையென்றால் வானொலியையே மூடிவிடுவர். மோதல் சரியாக அமைந்தால் விறுவிறுப்பு தானாக வந்து விடும்.

### பாத்திரங்கள்

கதையோடு நெருங்கிய தொடர்புடையவை பாத்திரங்கள். சிறு கதையில் ஒரு பாத்திரம் மட்டுமே வரும். ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் வந்தால் அவை பிரதான பாத்திரத்தைத் துலங்கச் செய்வனவாகவே இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் வந்தால் தானே நாடகம். வானொலி நாடகத்தில் நாடகாசிரியன் பாத்திரங்களை வெவ்வேறு குணப் பண்புகள் உடையனவாகவும் அவற்றின் தனிப்பண்புகள் நன்கு துலங்குமாறும் படைக்கவேண்டும். அது நாடகத்திற்குக் கவர்ச்சி ஊட்டுவதுடன், பாத்திரங்களை அடையாளம் காட்டிக் குழப்பத்தையும் தவிர்க்கும்.

நாங்கள் நாடகத்தையோ, கதையையோ பார்த்தபிறகும் எங்கள் மனதில் நிற்பவை அவற்றில் வந்த பாத்திரங்களே. மனதில் நன்கு பதியக் கூடிய பாத்திரங்களை உருவாக்க வேண்டும். தங்களைப் போன்ற பாத்திரங்களிலேயே மக்கள் ஆர்வம் காட்டுவர். சமகாலக் கதைகளை எடுத்துக கொண்டால், சமகாலப் பாத்திரங்களைப படைக்கலாம். தேவ, காந்தர, புராண, இதிகாச பாத்திரங்களுக்கு என்ன நடக்கின்றது என்று மக்கள் கவலைப்பட மாட்டார்கள்.

### உரையாடல்

சிறுகதையில் ஆசிரியர் தன் கூற்றாகச் சொல்லும், பகுதியை எந்த மொழி நடையிலும் எழுதலாம். சிறுகதையாயினும்சரி நாடகமாயினும்சரி பாத்திரங்களது உரையாடல், அவற்றின் இயல்பான பேச்சு வழக்கு மொழியிலேயே அமைந்திருத்தல் வேண்டும் அந்த மொழி நடையிலேயே பாத்திரங்கள் தாங்கள் சொல்லவந்

(9ஆம் பக்கம் பார்க்க)

## Jaffna College Institute of Technology

Vaddukoddai, Jaffna, Sri Lanka

Students are welcome to register for these courses immediately

Certificate Courses in Business & Scientific Applications

- Ms Word
- Ms Excel
- Ms Access
- Ms Power Point

Duration 3-4 Months

☑ *Facilities:*

Library, Hostel & Sports.

*Application forms are available at*

- JCIT, Vaddukoddai.
- Undergraduate department, Jaffna College. (Hospital Road, Jaffna)

Director

***Jaffna College Institute of Technology***

**Vaddukoddai.**

T.Phone: 070 - 213139

E-mail jcit @ s ltnet.lk

(சி-29136)(21-11-18)


## நெஞ்சகலா நினைவஞ்சலி

**பதினோராம் ஆண்டு** **முதலாம் ஆண்டு**





**அமரர்**
**தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)
திதி: திருதியை

தோற்றம் 12-09-1921 மறைவு 05-04-1992

**திருமதி**
**சுப்பிரமணியம் அன்னம்மா**
திதி: அபரபக்க சதுர்த்தசி

தோற்றம் 11-08-1926 மறைவு 07-08-2002

**ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்**
**என்றும் எங்கள் நினைவில் வாழும்**
**எம் அன்புத் தெய்வங்களின்**
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!சாந்தி! சாந்தி!

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி.
உரும்பிராய் வடக்கு. உரும்பிராய். (20750)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(21-11-18-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்** 25 - 03 - 1923



**மறைவு** 27 - 06 - 2003

### அமரர் நாகம்மா பரமநாதன்

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் வீட்டுக் கிருத்தியமும் இன்று (27-07-2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு, இன்று நிகழ்கின்ற நண்பகல் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- குடும்பத்தினர்.**

கலைவாணி மில் வீதி,
கொக்குவில் கிழக்கு. கொக்குவில் (20748) (21-11-18-19)

## வானொலி நாடகங்களில்.....

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

ததை இயல்பாகவும் விரைவாகவும் அழகாகவும் வெளியிடும். நேயர்களுமவற்றை இலகுவில் புரிந்து கொள்வர். அந்த உரை நடையே பாத்திர வார்ப்பும் செய்துவிடும். உரையாடல் எப்பொழுதும் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைச் செய்யும். சிறு கதையில் உரையாடல் சுருக்கமாகவும் நறுக்குத் தெறிந்தாற் போலவும் வேகமாகவும் ஓடவேண்டும். நாடகத்திலும் அவ்வாறே. ஆனால், நாடகாசிரியன் உரையாடலைக் கொண்டு பல வேலைகளைச் செய்கிறான். அதனால் அங்கே உரையாடல் சற்று விரிவாகவும் விளக்கமாகவும் இருப்பது தவிர்க்க முடியாதது. அதற்காக அனாவசியமாக ஒரு சொல்லையோ சொற்தொடரையோ கூடப் புகுத்தக் கூடாது. ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்ததாய் இருத்தல் வேண்டும்.

### சொற்செட்டு

சிறுகதையில் சொற்செட்டுதானாகவே வந்து அமையும். வானொலி நாடகத்தில் அதை மிகுந்த கவனம் எடுத்துச் செய்தல்வேண்டும்.

### குறிப்பால் பொருள் உணர்த்துதல்

சிறுகதை எதையும் விரிவாகவோ விளக்கமாகவோ சொல்லாது. பலவற்றை குறிப்பால் உணர்த்தும் என்பர். வானொலி நாடகம் விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லும். குறிப்பாகவும் உணர்த்தும் ஒரே நாடகமே பல கதைகளையும் பல கருத்துக்களையும் சொல்லும்.

### நோக்கு நிலை

கதை சொல்லும் பாத்திரமே நோக்கு நிலைப்பாத்திரம் எனப்படும். சிறுகதையில் ஆசிரியர் தானே கதை சொல்லலாம். அல்லது ஒரு பாத்திரத்தைக் கதை சொல்ல வைக்கலாம். நாவலில் நோக்கு நிலை மாறி மாறி வரலாம். சிறுகதை தொடக்கத்தில் இருந்து முடிவுவரை ஒரே நோக்கு நிலையிலேயே சொல்லப்பட வேண்டும். அதன் சிறிய அளவிற்கும், இறுக்கத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் அது அவசியமானது. வானொலி நாடகத்தில் ஆசிரியனுக்கு ஒரு வழிதான் உண்டு. அங்கே பாத்திரங்கள் உரையாடினாலும் நாடகாசிரியனே கதை சொல்கிறான்.

### ஒருமைப்பாடு (Anity)

சிறுகதை இலக்கியத்தில் ஒருமைப்பாடு ஓர் இன்றியமையாத அம்சம். இதுவரை கூறப்பட்ட அதன் அழகுகளே அந்த ஒருமைப்பாட்டை அதற்குக் கொடுக்கும். வானொலி நாடகத்தில் இந்த ஒருமைப்பாடு அவ்வளவு அவசியமில்லைத் தான். ஆனால், மற்ற இலக்கிய வகைகளுடன் ஒப்பிடுகையில் அது மிகவும் இறுக்கமாக அமைகப்பட வேண்டும்.

### கருத்து

இரண்டிலும் ஏதாவது ஒரு நல்ல கருத்து சொல்லப்பட வேண்டும். அந்தக் கருத்தே அந்த இலக்கிய வடிவத்திற்கு ஓர் அர்த்தத்தைக் கொடுப்பது. எழுத்தாளன் அதற்காகவே அவற்றை எழுதுகிறான். ஒரு நல்ல கருத்தைத்தானும் சொல்லாத எதையும் நான் எழுதுவதில்லை.


### விற்பனைக்கு

**(1) வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட புதிய டெக்**
SAMSUNG DVD+ VCR
(All in one)
**(2) பாவித்த** Paragon Computer
**என்பன' விற்பனைக்கு உண்டு.**
தொடர்பு:-
**V.K. Thayaparan**
Erlalai East,
Erlalai.
T.P. 077-6135398.
(20756) (21-11-18-26)

### கையடக்கத் தொலைபேசி தவறிவிட்டது

**மல்லாகம் சந்திக்கும் மல்லாகம் நீதியம்பணை பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் 10.07.2003 இல் 3310 ரக NOKIA கையடக்கத் தொலைபேசி தவறிவிட்டது.**
**கண்டெடுத்தவர்கள்**
**மல்லாகம்**
**நியூவிஜயா காட்வெயர்ஸ்**
**இல் ஒப்படைக்கவும் அல்லது 0777-563223 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.**
(21-26-11-18) (20754)


ஓய்வுபெற்ற
கிராம உத்தியோகத்தர்களை

## கௌரவித்து பாராட்டுகின்றோம்



**திரு.க.சிவராசா**
நல்லூர்



**திரு.செ.நெ. யேசுபாலன்** J.P.
வலிகாமம் வடக்கு



**திரு.பெ.செல்லையா**
தென்மராட்சி



**திரு.க.இரத்தினம்**
வடமராட்சி தெற்கு மேற்கு



**திரு.ம.யோசேப்**
வடமராட்சி கிழக்கு

யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இன்று (27-07-2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்க பொதுக்கூட்டத்தில் ஓய்வுபெற்றுள்ள இக்கிராம உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் சார்பில் அரசாங்க அதிபரினால் கௌரவிக்கப்படுகின்றனர்.


*யாழ்ப்பாண மாவட்ட*
*கிராம உத்தியோகத்தர் சங்கம்.*

68, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம. (20728) (21-19-11-18)

## 12ஆம் ஆண்டு நினைவு நாள்

## வீரவணக்கம்

19 - 04 - 1962



27 - 07 - 1991

### வீரவேங்கை லெப்.கேணல் சரா
### சின்னத்துரை ஜீவராசா
**(கல்வியங்காடு)**

ஆனையிறவுச் சமரில் தன் இன்னுயிரை மண்ணுக்காக நீத்த மறவனுக்கு வீரவணக்கம்!

ஆண்டுகள் பன்னிரண்டானாலும் உன் ஆசைமுகம் மறக்கவில்லை!

ஆனையிறவுச் சமரில் ஆருயிர்நீத்த மறவர்களுக்கும் எமது வீரவணக்கங்கள்!

குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

கல்வியங்காடு. (20746) (21-19-11-18)

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

### சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சந்திரசேகரப்பிள்ளைக்கு அண்மையில்) (சி-28665)

---

யாழ். மக்களுக்கு ஓர் அரியவாய்ப்பு!!!
வாருங்கள், வாருங்கள்......
யாழ்.பல்கலைக்கழகத்தில்
**ஜெயா புக் சென்ரர் அனுசரணையுடன் வணிகமாணவர் மன்றத்தினர் நடத்தும் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும். மலிவு விலையில் சகல நூல்களும் 10 வீத கழிவுடன். பிரதிகளுக்கு முந்துங்கள்.**

## புதிய வரவு

ரமணிச்சந்திரன் கதைகள், கர்நாடக சங்கீதம், கம்பியூட்டர் நூல்கள்,
தமிழ் இலக்கியங்கள், சரித்திரம், மருத்துவம், சிறுவர்களுக்கான கதைகள்,
ஆங்கில இலக்கணங்கள், இலக்கியங்கள், சமய இலக்கியங்கள்,
பொறியியல், பாடசாலைக்குரிய நூல்கள், அப்பியாசப் புத்தகங்கள்,
C.R.கொப்பிகள் இன்னும் பல...
சொற்ப பிரதிகளே இருப்பில் உள்ளன.
இன்றே வாருங்கள்!

யாழ். பல்கலைக்கழக
1. நூலகக் கேட்போர்கூடம்
2. வணிகத்துறை விரிவுரை மண்டபம் (CH$_1$).

(C29097) (26-21-15-11)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது வலிகாம கல்வி வலய எழுதுவினைஞர்
**செல்வி சந்திரமாதேவி அப்புத்துரை**
அவர்களின் அருமைத் தாயார்
**திருமதி சின்னம்மா அப்புத்துரை**

அவர்கள் 24-07-2003 அன்று இறைவனடிசேர்ந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு, அவரது பிரிவினால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலிகாம கல்வி வலய
நலன்புரிக் கழகம்,
மருதனார்மடம்.

(20726) (21-15-11)

---

## அதிபோஷாக்கு மிக்க உன்னத பானம்

# PROVIN-X

புரோவிமெக்ஸ் இல் 16 வகையான விற்றமின்களும் மேலதிக கனியுப்புக்களும் அடங்கியது.

- இழந்த சக்தியை விரைவாக மீட்டெடுத்தல்
- நோய்வாய்ப்பட்டோர் உடன் புத்துணர்வு பெற
- கண்பார்வை சக்தியை அதிகரித்தல்




மேலும் விளையாட்டு வீரர், கர்ப்பிணித்தாய்மார், வளரும் பிள்ளைகள், வயோதிபர் உட்பட முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற சிறந்த பானம்



*யாழ். முகவர்:* ஜெகன் பார்மஸி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 3191
*வன்னி முகவர்:* அகிலன்ஸ் பார்மஸி
(பிள்ளையார் மருந்தகம்), கிளிநொச்சி.

*இலங்கையில் சந்தைப்படுத்துவோர்:*
**ARKEM COLOMBO**
T.P.: 470290, 075 344436
E-mail: arkem@sltnet.lk

**PROVIN - X** தற்போது அனைத்து முன்னணி பார்மஸிகளிலும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-28738) (15-11)

---

## முதல் முறையாக அறிமுகமாகிறது




# ClimaX
# கிளைமெக்ஸ்

- ClimaX இல் இயற்கையான அனைத்து விட்டமின்களும் அடங்கியுள்ளது.
- ClimaX உடலுக்கு அதிசக்தியைத் தரக்கூடியது.
- ClimaX இல் உடலுக்கு உற்சாகம், சுறுசுறுப்பு, ஞாபகசக்தி போன்றவற்றைத் தரக்கூடிய அற்புதமான பதார்த்தம் அடங்கியுள்ளது.

பாவனைமுறை:- தினந்தோறும் இரவில் ஒரு கெப்சியூல் வீதம் தொடர்ந்து பாவித்து சிறந்த பயனைப் பெறலாம்.

யாழ்.முகவர்:-
ஜெகன் பார்மஸி,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வன்னி முகவர்:-
அகிலன்ஸ் பார்மஸி,
[பிள்ளையார் மருந்தகம்]
கிளிநொச்சி.

(C/28742) (15-11)

---



பெயாரோஸ் சுபமாங்கல்யம்

## உங்கள் திருமணச் செலவில் பெரும் பகுதியை நாம் ஏற்போம்..

உங்கள் திருமணத்தை வெகு விமரிசையாக நிகழ்த்த பெயாரோஸ் விரும்புகிறது. உங்களுக்கு பிடித்த விதத்தில், பிடித்த இடத்தில் திருமணத்தை நடத்தலாம். ஆனால் இந்த வருடத்தில் நடக்க வேண்டும் என்பதே எமது ஒரே வேண்டுகோள்.

- மணப்பெண்ணின் புடவை ◦ தங்கச் சங்கிலி ◦ பாதணிகள்
- தோழியர் இருவரின் புடவைகள் ◦ ஆபரணங்கள் ◦ பாதணிகள்
- முக அலங்காரம் ◦ தலையலங்கார ஆலோசனைகள்
- மலர் அலங்காரம் ◦ மணமேடை அலங்காரம்
- மேசை அலங்காரம் ◦ திருமண கேக்
- திருமண ஸ்ரக்சர் கேக் ◦ திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள்
- புகைப்படங்கள்/வீடியோ படங்கள்
- 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள்

இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை கவிதை எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 20g அல்லது 50g பெயாரோஸ் வெற்று உறையுடன் இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

பெயாரோஸ் சுப மாங்கல்யம், ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிரைவட்) லிமிட்,
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.

முடிவுத் திகதி 2003 ஆகஸ்ட் 31.




# FairRose
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste

அழகுக்கலை ஆலோசனைகளை வழங்கும் அனுசரணையாளர்கள்
**Salon Nayana**

மென்மையான சருமத்திற்கு
வெண்மையான முகத்திற்கு

Licence No.: C/39/2003

# புண்ணியத்துக்குரிய வசந்தம்



மௌனச் சிறகுகள்
அசைந்த பின் வரி வடிவம்
கொள்ளா வார்த்தைகளில் தொடங்கிய
விழிகளின் நட்புறவு
கதகதப்பு நிறைந்த மாலையில்
உன்னைக் கண்டதும் நீயாக
மாற ஆசைப்பட்டேன்
உனது நீயும்
எனது நானும்
இடம் மாறி எங்கோ தொலைதூர
கனவு வெளியில்
விசைக் கோடுகளால் முகிற் படுக்கைகளில்
முகம் பார்த்தவர் ஆனோம்
நீண்ட இராக்களின் மோகனத்தில்
உனது இலாவண்யம் எனது
இறகுகளை கோதிக் கொண்டிருந்தது.
தூங்க மறுக்கும் இரவுகளில்
எனது தூரிகை உனது விரல்களின்
முறிவுகளை வரைந்து
வண்ணத்தை பூசத் தொடங்கியது
உனக்கும். எனக்கும். இன்னும் பிறர்க்கும்
தெரியாது போன ஒரு உறவு
இங்கே மலர்ச் செடிகளில் வாசமாக
வீசும் வண்ணம் கண்டாயா?
இன்னும் எஞ்சி நிற்கும்
வசந்தம் நானும் நீயும் கண்ட
ஒரே கணக் கனவின் பயனல்லவா?
எங்காவது நானும் நீயும்
பார்த்துக் கொண்டபின்
எஞ்சும் வசந்தம் இந்தப்
பிரபஞ்சத்தின்
புண்ணியத்துக் குரியதல்லவா?

-கோகுலராகவன்

•••

# இன்றுடன் வயது இருபது!

சீரற்ற போர் நிறுத்த ஒப்பந்த உடன்படிக்கை – ஓர்
வேரற்ற விருட்சம்
ஊருக்கு வெளிச்சம் வேண்டும்
என்பதற்கு
தேருக்குத் தீயிட்ட கரங்களுடன் என்ன
கைகோர்ப்பு?
நீருக்குள்ளும் நெருப்பிருக்கும் என்ற படி
ஏன் இன்னும் பொறுமை காப்பு?
நாம் எம் வேலிக்குக் கதியால் இட்டால்
நீ என்ன பிடுங்கி எறிவது? – எம்
சாமிக்கு மலர்மாலை அணிய
உன்னிடமென்ன அனுமதி பெறுவது?
அழகான என் தமிழில் கூட :உன்
கரங்களில் ''நிறுத்துக'' என்ற பெயர்ப்பலகை – அது
எம்மவர்க்கா? அல்லது உன் வன்முறைக்கா?
உன் கழுத்தில் கட்டப்பட்ட கறுப்புத்துணி
மீண்டும் எமக்கொரு கறுப்பு ஜூலையை
நினைவூட்டும் – என்
குச்சொழுங்கை முடக்கில்
அடிக்கடி உனக்கென்ன வேலை.
போதிமரத்துப் புனிதம் காக்கும் – நீ
வேதியரின் புனிதம் அறிவாயோ. – எம்மூர்
அம்மன் சிலைகளில் தூசுபட்டால் கூட – எம்
வாள்கள் நீளும்
எம் புனிதம் அப்படி
ஆத்தாளின் அழகு தமிழும்
அப்பனின் வீச்சரிவாளும் – எங்கள்
வீரச் சொத்துக்கள் – இன்றுடன்
எனக்கும் வயது இருபது!

•••

-கல்வை கவித்தீ

# விதைகள்

# எவ்வகையில் தமிழ் வளரும்?

தமிழ் இரத்தம் ஓடாத
தமிழர்கள் வாழுமிடம்
தரணியிலே தமிழ்ஈழம்
எனப் பெயர் கொண்ட இடம்
தமிழினிலே கையெழுத்து
வைத்திடவும் மாட்டார்கள்!
தமிழினிலே வாழ்த்திடவோ
வரவேற்போ செய்யார்கள்!
தமிழர்இவர் எனக்காட்டும்
தமிழ்உடையை அணியார்கள்!
தமிழர்இவர் ஆங்கிலர்போல்
உடை அணிவர் எந்நாளும்!
இசையினிலோ தமிழ் இசையை
இசைத்திடவே விரும்பார்கள்!
வசைபாடும் வேளையிலே
வகையாகத் தமிழ்இசைப்பார்கள்
நடனமதைத் தமிழினிலே
பயின்றிடவும் முடியாமல்
வடமொழியாம் சமஸ்கிருதம்
தனைநாடிச் செல்வார்கள்!
உடற்பயிற்சி செய்கையிலும்
உயர்வுதமிழை புறக்கணிப்பர்!
அடக்கியமை ஆண்டிட்ட
ஆங்கிலத்தில் செய்திடுவர்!
பெயர்கள் வைப்பினும்
பெருந்தமிழ்ப்பேர் வையார்கள்!
இவர்கள் செயல்களை நான்
என்னவென்று எடுத்துரைப்பேன்!
இவ்வகையே தமிழர்இனம்
தமிழ் மொழியைப் புதைக்கையிலே
எவ்வகையில் தமிழ்வளரும்
எனஏங்கி அழுகிறேன்!

க.சிவமலர்
மீசாலை

# ம(ர)ணம்

மணம் முடிக்க~அவள்
மனம் ஆசைப்பட்டது
"சீதனம்".... அவளை
மரணத்துடன் மணம்
முடித்து வைத்தது

-திராட்சையூரான்



# அது எந்தக் காலம்?

பள்ளி சென்று பாடம் படிப்பது அந்தக்காலம்
அது அந்தக் காலம் – இங்கே,
பள்ளி தோறும் காடையர் வந்து படுக்கை விரிப்பது
இந்தக்காலம்– இது இந்தக்காலம்

வீதி ஓரம் வீடு இருந்தன அந்தக்காலம்
அது அந்தக்காலம்– முள்ளு,
வேலி போட்டுக் காவல் அரண்கள் கட்டி வைத்தனர்
இந்தக்காலம்– இது இந்தக்காலம்

பாவையர் என்றால் பாரா தொதுங்குதல் அந்தக்காலம்
அது அந்தக்காலம் – சுறைப்
பல்லைக் காட்டிச் சீட்டி அடித்துப் பகிடி செய்வது
இந்தக்காலம்– இதுஇந்தக்காலம்

பண்பு பாவம் என்று பகுப்பது அந்தக்காலம்
அது அந்தக்காலம்–கொடும்
பாலியல் உறவும் கொலையும் களவும் பண்பாடாயின
இந்தக்காலம்– இது இந்தக்காலம்

வேலை செய்து வீட்டில் வாழ்ந்தது அந்தக்காலம்
அது அந்தக்காலம்– மக்கள்
வீதி நின்று கைகள் ஏந்தி விழிநீர் சிந்துவது
இந்தக்காலம்– இது இந்தக்காலம்

எதிரி வந்தால் எதிர்த்து நின்றது அந்தக்காலம்
அது அந்தக்காலம்– ஓடி,
எதிரி காலில் விழுந்து வணங்கி ஏத்தி மகிழ்வது
இந்தக்காலம்– இது இந்தக்காலம்

வீடும் வாழ்வும் நாடும் இழந்தனம் இந்தக்காலம்
இது இந்தக்காலம்– நாங்கள்,
வீரம் மானத்தோடு விரும்பும் வாழ்க்கை வாழ்வது
எந்தக்காலம்– இனி எந்தக்காலம்?

-வீ . பரந்தாமன்


மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்களும் Street Smart உரிமையாளராக
விருப்பு வர்ணத்திற்கு முந்துங்கள்
2 Year warranty



HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

RG
இரத்தினகோபால்ஸ்
63, 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 6185 ☎ 0777 340056

UTHAYAN Graphics
(C/29146)



# அமரர் விசுவநாதர் இராசேந்திரம்

(இளைப்பாறிய தபாலதிபர், கிளாக்கர்)

# கண்ணீர்ப் பூக்கள்

உங்களைக் கண்டு நாம் உரையாட ஓடிவந்தும்
காண முடியாத பாவிகளானோம்!
மங்காத மணி விளக்காகத் திகழ்ந்த நீங்கள்
மரணித்ததை நம்பமுடியவில்லை!
எங்குதான் சென்றீர் எமைத் தவிக்கவிட்டு?
கண்ணீர்ப்பூக்களால் அஞ்சலி செய்கின்றோம்!

அன்புமக்கள், மருமக்களான
- சரவணபவானந்தன் (பிரான்ஸ்)
சரோஜினிதேவி (பிரான்ஸ்)
- சதானந்தன் (ஹொலண்ட்)
கௌரி (ஹொலண்ட்)
- கிருபானந்தன் (ஜேர்மனி)
வசந்தி (ஜேர்மனி)
- சிவானந்தன் (பிரான்ஸ்)
- மாலா (பிரான்ஸ்)
- ஜெயராணி (கனடா)
குணபாலசுந்தரம் (கனடா)
- நித்தியநாதன் (லண்டன்)
விஜயந்தி (லண்டன்)
- மகானந்தன் (கனடா)
சுகேந்தினி (கனடா)
- லோகானந்தன் (பிரான்ஸ்)
விஜியகலா (பிரான்ஸ்)

இல. 177, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு.

(20765) (15-11)

குறிப்பு:- அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2003) ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று புதவுடல் துண்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

# சிவாஜியின் நடிப்புத்திறமைக்கு சான்றான ஆங்கில வசனங்கள்

மறைந்தும் மறையாப் புகழ் கொண்ட நடிப்புலகின் இமயம் பத்மஸ்ரீ சிவாஜி கணேசனைப்பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி பின்வருமாறு குறிப்



பிடுகின்றார். "சிவாஜி தமிழ், இந்து கலாசாரத்தின் ஒரு மகத்தான உருவத்திருமேனி (Sivaji is a dominating idol of Tamil and Siva culture).

பேராசிரியரின் கருத்து நூற்றுக்கு நூறு வீதம் உண்மையே. ஏனெனில், பராசக்தியிலிருந்து படையப்பா வரை இப்பட்டியல் நீண்டு செல்லும். இந்த வீச்சுக்குள் தமிழ் மற்றும் சைவ கலாசாரத்தின் குறியீடுகளாக அவர் ஏற்று நடித்த பாத்திரங்கள் ஏராளம்.

அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடி உயிர் துறந்த ஈழத்தமிழரின் வீரபுருஷன் மாவீரன் பண்டார வன்னியனின் பாத்திரத்தை அவர் ஏற்று நடிக்காமை எமது துரதிஷ்டமே. இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத்தவறிய எமது நாட்டு மூத்த முதுபெரும் கலைஞர்களே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

அழகு தமிழில் அட்டகாசமாகப் பேசி நடிப்பினால் ரசிகர்களைத் திணற வைத்தவர் சிவாஜி. இருப்பினும், இடையிடையே சில ஆங்கில வசனங்களை அச்சொட்டான உச்சரிப்போடு எடுத்துரைத்து ரசிகர்களின் மனங்களைக் கொள்ளை கொள்ளவும் அவர் தவறவில்லை. சிவாஜி நடித்த திரைப்படங்களிலே இன்னொரு சிறப்பம்சமும் உண்டு. அவர் நடித்த அனேகமான திரைப்படங்களில் சிறுசிறு கட்டங்களாக சில நாடகங்களும் புகுத்தப்பட்டிருக்கும்.

இந்தவகையில் 'அன்னையின் ஆணை' திரைப்படத்தில் 'சாம்ராட் அசோகன்' என்ற நாடகம் இடம்பெறுகிறது. 'உத்தமன்' என்ற திரைப்படத்தில் 'அனார்க்கலி' என்ற நாடகம் ஆரம்பத்தில் மிகவும் உணர்ச்சி பூர்வமாக நடைபெறுகிறது. 'ராஜபாட் ரங்கதுரை' என்ற திரைப்படத்திலே 'ஹாம்லட்' என்ற ஆங்கில நாடகமும் 'அல்லி அருச்சுனா' போன்ற சில நாட்டுக் கூத்துகளும் இடம்பெறுகின்றன. இவ்வாறு இப்பட்டியல் நீண்டு செல்லும்.

திரைப்படத்தினுள்ளே நாடகங்களைப் புகுத்தி நடிப்பது மற்றைய நடிகர்களின் திரைப்படங்களில் மிகவும் அரிது.

தங்கப்பதக்கம் திரைப்படத்திலே கொள்ளைக்காரனாக நடிக்கும் ஸ்ரீகாந்தைப் பொலீஸ் இன்ஸ்பெக்டராக நடிக்கும் சிவாஜி சுட்டுக்கொன்று பாசத்தை



விட கடமைதான் பெரிது என்பதை நிலை நாட்டுகின்றார். இப்படத்திலே ஸ்ரீகாந், சிவாஜியின் மகனாக நடிக்கின்றார். இறந்த தனது மகனின் சடலத்தைத் தனது மடியிலே அரவணைத்தபடி பின்வரும் ஆங்கிலக் கவிதை வரிகளை உச்சரிக்கின்றார் சிவாஜி.

Twinkle twinkle little star
How I wonder what you are
Up above the world so high
Like a diamond in the sky.

ஆங்கிலக் கவியியலிலே மேற்படி பாடல் ஒரு மகிழ்ச்சியான தாலாட்டுப் பாடல். ஆனால், சோகமயமான ஒரு கட்டத்தில் அதனை சிவாஜி பயன்படுத்தியவிதம் அவருக்கேயுரிய ஒரு தனிப்பாணியாகும்.

'பைலட் பிரேம்நாத்' படத்திலே ஒரு காட்சியில் தனது மூன்று பிள்ளைகளில் ஒன்று தனக்குப் பிறந்ததல்ல என்பதை உணர்கின்றார். ஆனால், அது எந்தப்பிள்ளை என்று அறிய முடியாமல் தவிக்கின்ற கட்டத்தில் உணர்ச்சி பொங்க பின்வரும் வசனத்தைக் கையாளுகின்றார்.

"The puzzle is, who is the black sheep?"

(புரியாத புதிர் என்னவென்றால் யார் இந்த வெள்ளாட்டு மந்தையில் கறுப்பாடு?") இங்கு 'black sheep' என்பது ஒரு ஆங்கில மரபுச் சொற்றொடராகும் (Idiomatic phrase) நல்லவர்கள் மத்தியில் ஒரு அயோக்கியன் என்பதே இம்மரபுச் சொற்றொடரின் கருத்தாகும்.

உலகப் புகழ்பெற்ற நாடக மாமேதை வில்லியம் ஷேக்ஸ்பியரின் யூலியஸ்ஸீசர் நாடகத்தினை திரைப்படமாக்கி அதிலே சிவாஜி சீசராக நடிக்கின்றார். சதிகாரக் கூட்டத்தினர் சீசரைக் கொலைசெய்யும் நோக்கத்தோடு வஞ்சகமாக அவரை அழைத்து ஒருவர் மாறி ஒருவராக அவரது மார்பிலும் முதுகிலும் கத்திகளைப் பாய்ச்சுகின்றனர். இறுதியாக அவரது தோழமைமிக்க நண்பனான புரூட்டஸ் முதுகிலே குத்துகின்றான். இக்கடடத்தில் 'You too Brut' (புரூட்டஸ் நீயுமா) என்ற வாக்கியத்தை உணர்ச்சிபொங்க உச்சரித்து தோழமை பகைமையாக மாறியதன் அதிர்ச்சியை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றார் சிவாஜி. இக்கட்டத்தில் Brutus என்ற சொல்லை அவர் முழுமையாக உச்சரிக்குமுன் உயிர் துறக்கின்றார். தலை சிறந்த நடிப்புக்கு இது ஒரு தகுந்த உதாரணம். இதே திரைப்படத்தில் இன்னொரு கட்டம். தனது தோழர்களினால் சீசர் வஞ்சகமாக முதவைக்கு (Senate) அழைக்கப்படுகின்றார். அவர் புறப்பட ஆயத்தமாகிறார். சீசரின் மனைவி சில அபசகுணங்களை உணர்த்தி அவரைப் போக வேண்டாமென்று தடுக்கின்றாள். இக்கட்டத்திலே சீசரோ வேகத்தோடு அவர் உச்சரித்த அந்த வசனங்கள் இன்றும் செவிகளில் ரீங்காரிக்கின்



றன. "Cowards die many times before their death but the valiant reven taste of death but once". ("அஞ்சினோர்க்கு சதாமரணம் அஞ்சாத நெஞ்சத்துமாவீரர்க்கு ஒரு மரணம்.")

மேலும் சிவாஜி 'ராஜபாட் ரங்கதுரை' திரைப்படத்திலே ஹாம்லட் நாடகத்திலே கதாநாயன் HAMLET

**யாழ்.வதிரிவாசன்**

இன் பாத்திரத்தை ஏற்று நடிக்கின்றார். தனது தாயின் கற்பில் சந்தேகம் கொண்ட HAMLET அதற்குக்காரணமான தனது சிறியதகப்பனைக் கொல்வதா விடுவதா அல்லது தானே தன்னைக் கொலைசெய்து விடுவதா என்ற மும்முனைப் போராட்டத்துள் திணறுகின்றான். அக்கட்டத்திலே அவர் கம்பீர நடையோடு உச்சரிக்கும் வசனங்கள் இவை. உலகப் புகழ்பெற்ற மாமேதை வில்லியம் ஷேக்ஸ்பியரின் அசாதாரண கற்பனையில் உதித்த இவ்வசனங்களுக்கு சிவாஜி தனது அசாதாரண நடிப்பினால் உயிர்த்துடிப்பூட்டுகின்றார்.

To be or not to be?
That is the question.
Whether it is Robler in the mind to suffer the slings and arrows of outrageous fortune or to take arms against a sea of troubles and by opposing end them.

சிவாஜி ஆங்கில இலக்கியத்துக்கும் தனது நடிப்பின்மூலம் புகழ் சேர்த்துள்ளார் என்பது வெள்ளிடைமலை.



கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய வேள்வி நெருப்பு சிறுகதை தொகுதி நூல் வெளியீட்டுவிழா அண்மையில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்றபோது நூலின் முதல் பிரதியை பேராசிரியர் அ. சண்முகதாஸ் சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் ச.செல்வராசாவிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். மத்தியில் நூல் ஆசிரியர் கவிஞர் ச.வே.பஞ்சாட்சரமும் காணப்படுகின்றார். (ஐ-135)

# வலிகாமம் வலய கருத்தரங்குகள்

வலிகாமம்தெற்கு,ஜூலை27

வலிகாமம் கல்விவலயத்தினரால உளவளத்துணையாளர்கள், நாடக, நடன ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் போன்றோருக்கான கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இயங்கிவரும் ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கிற்கு வலயக்கல்வி அலுவலகத்தினால் அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே பங்குபற்றமுடியும் என அறிவிக்கப்பட்டுளளது!

நாளை திங்கட்கிழமை பாடசாலைகளில் பணியாற்றும் உளவளத்துணையாளர்கள் அல்லது நட்புதவியாளர்களுக்கான "வன்முறையற்ற தொடர்பாடல்" தலைப்பிலான கருத்தரங்கு நடைபெறும்.

ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடக, நடன ஆசிரியர்களுக்கான 'உலகின் நவீன அரங்குகள்' என்ற பொருளிலான கருத்தரங்கும் -

ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை அதிபர்களுக்கான "பிரச்சினை தீர்த்தல்" தொடர்பான கருத்தரங்கும் நடைபெறவுள்ளன.

கருத்தரங்குகள் யாவும் காலை 8.30மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும். (எ-152)

# இலவச பாடநூல் அமைப்பில் அடுத்த ஆண்டுமுதல் மாற்றங்கள்

## நூல் வெளியீட்டுத் திணைக்களம் ஏற்பாடு

வலி.தெற்கு.ஜூலை27

அடுத்த வருடம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள இலவச பாடநூல் அமைப்பில் புதியமுறையினை அறிமுகப்படுத்த பாடநூல் வெளியீட்டுத் திணைக்களம் தயாராகி வருகின்றது.

முக்கிய பாடங்களான தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி (சுற்றாடல்) போன்ற பாடநூல்களில் ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனியாக மூன்று புத்தகங்களை வெளியிடவும் -

பாடசாலைகள் அவற்றில் ஒன்றைத் தமது பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பொருத்தமானதாகத் தெரிவு செய்யவும் வழிசெய்வதாக இத்திட்டம் அமைவதாகக் கூறப்பட்டது.

ஒவ்வொரு பாடத்திலும் மூன்று வகையான புத்தகங்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலுமாக மொத்தம் ஒன்பது புத்தகங்கள் அச்சிடப்படவுள்ளன.

இந்தப் புத்தகங்கள் அவ்வப் பிரதேச அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சேவைக்கால ஆசிரியர்களின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களின் தீர்மானத்துக்கு அமைய ஒரு புத்தகத்தைப் பாடப்புத்தகமாகப் பயன்படுத்தத் தெரிவுசெய்யலாம்.

உதாரணமாக தமிழ்மொழியில் தயாரிக்கப்படும் மூன்று வகையான புத்தகங்களில் ஒன்றை அவர்கள் பாடப் புத்தமாகத் தெரிவுசெய்யலாம். ஏனைய இரண்டு புத்தகங்களும் உசாத்துணை நூல்களாக பாடசாலை நூலகங்களுக்கு வழங்கப்படும்.

பாடநூலாகத் தெரிவுசெய்யப்படாத ஏனைய இரண்டு நூல்களிலும் மேலதிக நூல்கள் தேவைப்பட்டால் அவற்றைப் பணஞ்செலுத்திப் பாடசாலைகள் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்நூல்கள் மூன்று மொழிகளிலும் பல எழுத்தாளர்களின் உதவி பெறப்பட்டுத் தயாரிக்கப்படும்.

அடுத்த மாத முடிவுக்குள் இந்த நூல்கள் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு முன்னோடிப் புத்தகங்களாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தரம்10, 11 ஆகிய வகுப்புகளுக்குரிய தேசபடப் பயிற்சிப் புத்தகங்கள் விமான நிலைய நில அமைப்புக்கேற்ப புதிய மெட்ரிக் முறை அமைப்பில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன.

மேலும், தரம் ஒன்றுக்கான சகல நூல்களும் பாடசாலைகள் கேட்கும் தொகைக்கு விநியோகிக்கப்படும்.

தரம் 9இற்கான விஞ்ஞானத் தொழில்நுட்ப பாடத்துக்கென புதிய நூல் தயாரிக்கப்படுவதால் அப்புத்தகங்களும் பாடசாலை மாணவர்களின் தொகைக்கு ஏற்ப வழங்கப்படும். (எ-152)

## செய்திக் கொத்து

### கசூரினா பீச்சில் பிதிர்க்கடன் செலுத்த விசேட ஏற்பாடு

காரைநகர்.ஜூலை27

காரைநகர் ஈழத்துச் சிதம்பர புண்ணிய தீர்த்தக் கரையான கசூரினா கடற்கரையில் ஆடிஅமாவாசை தினமான நாளை பக்தர்கள் பிதிர்க்கடன் செலுத்தவும், தீர்த்தமாடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஈழத்துச் சிதம்பரத்திலும், நாளை விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் என்பனவும் நடைபெறும்.

பக்தர்கள் தீர்த்தமாட செல்வதற்கு வசதியாக யாழ். மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து விசேட பஸ்சேவைகளும் ஆலயம்வரை நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-73)

### விடைத்தாள் மதிப்பிடும் பணிக்கு விண்ணப்பம்

தெல்லிப்பழை,ஜூலை27

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணிக்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கையும் மாதிரி விண்ணப்பப் படிவமும் பரீட்சைத் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். (எ-10-150)

### பொலீஸார் நடத்திய கசிப்பு வேட்டை

இணுவில்,ஜூலை27

கோண்டாவில் கிழக்கு, உரும்பிராய் மேற்கு மற்றும் அன்னங்கை, உரும்பிராய் கிழக்கு செல்வபுரம் பகுதிகளில் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இருதினங்களும் இரவுவேளைகளில் பொலீஸார் கசிப்பு வேட்டையில் ஈடுபட்டனர்.

இந்த திடீர் நடவடிக்கையின் போது செல்வபுரத்தைச் சேர்ந்த நபரொருவர் கசிப்புடன் பிடிபட்டார். (எ-49)

### கலந்துரையாடல்

இணுவில்,ஜூலை27

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் ஜி.ரி.இசற் அமைப்பின் உதவியுடன் நிறுவப்படவிருக்கும் கட்டட வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ்.சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-49)

### சம்பள உயர்வு வழங்க ஏற்பாடு

வலி.தெற்கு.ஜூலை27

வலிகாமம் கல்வி வலயத்தில் தேக்கநிலைச் சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளாது கடமையாற்றி வருகின்ற பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேக்கநிலைச் சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வு நிலுவைகளைப் பெறுவதற்கு தகுதியுடைய அதிபர், ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10-152)

### கால்நடை வளர்ப்போர் சங்கம் இயங்குகிறது

வலி.தெற்கு,ஜூலை27

வலி.தெற்கு கால்நடை வளர்ப்போர் சங்கம் மீண்டும் தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள கால்நடை வளர்ப்போர் சங்க உறுப்பினர்களை மீண்டும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடவைக்கும்முகமாகக் கடனுதவிகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. (எ-10-152)

### குருநகரில் சுகாதாரக்கேடு

கொழும்புத்துறை,ஜூலை27

குருநகர் இராசேந்திரா வீதி மற்றும் இராசேந்திரா ஒழுங்கைப் பகுதி வாய்க்கால்களில் கழிவு நீர் தேங்கி நின்று பெரும் சுகாதார சீர்கேடுகளை தோற்றுவிப்பதாக கூறப்படுகின்றது.

இப்பகுதியில் இருந்து கடலுக்குச் செல்லும் கழிவு நீர் பாதைகளில் தடைகள் ஏற்பட்டு நீர் வடிந்தோடமுடியாது தேங்கி நிற்பதாகவும் - நுளம்பு பெருக்கமும் துர்நாற்றமும் இதனால் அதிகரித்து வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-30)

# காணாமற்போன உறவுகள் குறித்து நல்ல தீர்வை பெற்றுத் தாருங்கள்!

## பாதுகாவலர் சங்கம் மன்னிப்புச் சபைக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை27

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன தமது உறவுகள் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் தொடர்புகொண்டு நல்லதொரு பதிலைத் தமக்குப் பெற்றுத்தருமாறு சர்வதேச மன்னிப்புச் சபையிடம் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபைக்கு பாதுகாவலர் சங்கம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 14ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஒன்று நடைபெற்றது. அப்போது, இதுவரை எத்தனையோ தடவைகள் விசாரணைகள் நடைபெற்றுள்ளபோதும் எதுவித பதிலும் தமக்குத் தரப்படவில்லை என்று காணாமற்போனோரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் விசாரணைக்குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

இதுவிடயம் குறித்து யாழ்.அரச அதிபரிடம் கேட்டபோது, தன்னால் எதுவும் செய்யமுடியாத நிலை உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

7ஆண்டுகளுக்கும் மேலாக எமது உறவுகளின் நிலைபற்றி எதுவும் தெரியாதுள்ளது. எனவே, எமது உறவுகள் உயிருடன் உள்ளனரா அல்லது இறந்துவிட்டனரா என்ற பதிலையாவது எமக்குப் பெற்றுத்தாருங்கள் - என்று அதில் உள்ளது.

(எ-10-ரி)

## ஆஸ்பத்திரியில் நூல்நிலையம்

தென்மராட்சி,ஜூலை27

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நூல்நிலையம் அமைக்கப்பட்டுவருகிறது.

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் இந்நூல் நிலையம் இயங்கவுள்ளதாக ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இதற்கென தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்டுள்ளதாகவும், வார்ட்டுகளில் தங்கியுள்ள நோயாளர்கள், வெளிநோயாளர்கள் பிரிவுக்கு வரும் நோயாளர்கள் இந்நூல் நிலையத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் - கூறப்பட்டது.

(எ-117)

## சாவகச்சேரி நகரில் மேலும் இரு வீதிகளுக்கு மின்சாரம் விநியோகம்

தென்மராட்சி,ஜூலை27

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளவில் இயங்கும் ஜெனரேற்றரிலிருந்து மேலும் இரு வீதிகளைச் சேர்ந்த பல வீடுகளுக்கு நேற்றுமுன் தினம் தொடக்கம் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

தபாற்கந்தோர் வீதி, டச்சுவீதி ஆகியவற்றுக்கே மின்சாரம் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜெனரேற்றர் இயங்கத் தொடங்கி கடந்த நான்கு மாதங்களாக கண்டி வீதி, கண்டுவில் வீதி ஆகியவற்றில் உள்ள அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் ஆகியவற்றுக்கு இதுவரை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 3மணிவரையும் -

இரவு 7மணி தொடக்கம் இரவு 10மணி வரை மின் வழங்கப்பட்டு வந்தமை தெரிந்ததே.

(எ-117)


### ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இன்று (27.07.2003) ஞாயிறு எம்மால் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத பல காரணங்களால் 06.08.2003ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

* சீட்டிழுப்பு திருநெல்வேலி உப அலுவலகத்தில் நடைபெறும்.

*பட்டப்படிப்பு*
*மாணவர் ஒன்றியம்*
*வடமராட்சி கிழக்கு.* (20779) (31-13-16) - நிர்வாகம்.

### 60ஆவது பிறந்தநாள் வாழ்த்து



வட்டுக்கோட்டை
லயன்ஸ் கழகத்தின் தலைவர் (2002-2003)
உயர்திரு. லயன் வி.வேலுப்பிள்ளை
(இலங்கை மின்சாரசபை மாகாண அபிவிருத்தி பொறியலாளர்)
அவர்கள் தமது 60ஆவது பிறந்த நாளை 25.07.2003 அன்று கொண்டாடினார். அவரை சீரும் சிறப்பும் பெற்று நீடூழி காலம் நலமுடன் வாழ்கவென எமது கழகமும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.

(20774) (32-31-13-16) வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்.

### *பாராட்டி வாழ்த்துகின்றோம்*



பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கத்தின் ஓய்வுபெற்ற பிரதம லிகிதரும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான
உயர்திரு. கிறிஸ்தோப்பர் எட்வேட் மங்கிறாஸ்
அவர்கள் 23.07.2003இல் யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு அவரை நாங்கள் மனமுவந்து மகிழ்ச்சியோடு பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது பணி போலும் சிறப்புற இறையருளை வேண்டுகின்றோம்.

பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு. *-பணியாள நண்பர்கள்.*
(20778) (31-13-16)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### சிங்கள மொழிபெயர்ப்பு

பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்களை சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யக் கூடியவர்களின் சேவை கோரப்படுகின்றது.

சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர்களாக இருத்தல் அவசியம். 29.11.1993 திகதியிடப்பட்ட பொதுநிர்வாக சுற்றறிக்கை இல.27/93 இன் பிரகாரம் கொடுப்பனவு வழங்கப்படும். தகுதியுடையவர்கள் பொருத்தமான விவரங்களுடன் 10.08.2003 ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்.

யாழ். பல்கலைக்கழகம். பதிவாளர்.
(C/291-45) (26-13-16-31)

### கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும்
### கொக்குவில் இந்து முன்பள்ளி மெய்வல்லுநர் விழா-2003

**காலம்:** இன்று (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு
**இடம்:** கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்
**பிரதம விருந்தினர்:** திரு.அ.பஞ்சலிங்கம்
(முன்னாள் அதிபர்.கொக்குவில் இந்துக் கல்லூரி)
**சிறப்பு விருந்தினர்கள்:** திருமதி.செ.சகாதேவன்
(அதிபர்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)
திரு. N. யோகநாதன்
(செயலாளர்.கொக்குவில் மத்திய ச.ச.நிலைய லண்டன் கிளை)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

முன்பள்ளி ஆசிரியர்கள்,
மாணவர்கள்,பெற்றோர்கள்.
ச.ச.நிலைய நிர்வாகத்தினர்.
(20769) (32-13-16-31)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள அலுமினிய பிற்றிங் கண்ணாடி சோக்கேஸ் விற்பனைக்கு உண்டு.
*தொடர்பு:*
அம்பிகாபதி
அழகு மாடம்,
9A, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
☎ 222 2084
(20773) (32-13-16-31)

### வேலையாள் தேவை

எமது நிறுவனத்துக்கு அருகில் வசிப்பவரும் வர்த்தகத்துறையில் கல்விகற்றவருமான ஆண் ஊழியர் தேவை.
*தொடர்பு:*
மூர்த்தி வீடியோ & எலக்ரோனிக்,
மானிப்பாய்.

### 2003 உயர்தர முடிவுகளை எதிர்பார்த்திருப்போரும் இணைந்து கொள்ளலாம்

இந்தியாவின் பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தேசிய முதல் தரக் கல்லூரி

**B.B.M, B.Sc, B.C.A, B.Com+ பட்டப்படிப்பு**
**2003 ஆகஸ்ட் 4 இல் ஆரம்பம்**

இவ் வருடம் அனுமதி பெற்று ஒரு வருடத்தை மீதப்படுத்துங்கள்

மேலதிக விவரங்களுக்கு:
www.nfgcollege.com
குணவர்தன 01-811524
குணசேகர 038-2232657
கம்பனி செக்கட்டேரியல் சேர்விசஸ் பிரைவேட் லிமிட்டட்
205C 1/1, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை.
தொலைபேசி: 01-854438

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு.மு.நடராஜா அவர்களின் அன்பு மாமனார் **குமாரு கந்தையா** அவர்கள் காலமான செய்தியறிந்து நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-29148) (29-13-16-31)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

### வேலையாள்கள் தேவை

**எமக்கு ✵ மேசன் ✵ கூலியாள் தேவைப்படுகின்றனர்**

வேலை செய்ய விரும்புவோர் நாளை (28.07.2003) திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

*தொடர்பு :* கே.எம்.பி. அசோசியஸ்,
95, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(20777) (31-13-16)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கதிர்காமு மகாலிங்கம்
மலர்வு 27-12-1927 உதிர்வு 07-08-2002
திதி :27.07.2003
மறைந்து ஓராண்டு சென்றாலும் -
என்றும் நிறைந்து இருப்பீர்கள்
எம் நெஞ்சில்.....!

70/12, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்.
(20767) (32-13-16-31)

### கண்ணீர் அஞ்சலி



எம்முடன் கூட வாழ்ந்து பாசத்தையும்
அன்பையும் பொழிந்த தெய்வமான
அமரர்
விசுவநாதர் இராஜேந்திரம்
அவர்களது மறைவு தாங்கமுடியாத பேரிழப்பாகும். தந்தைக்குத் தந்தையாய் இருந்து வழிகாட்டிய இவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*46/1, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* - சிவானந்தன் குடும்பத்தினர்.
(20764) (26-13-16-31)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 12 1917



உதிர்வு 07 08 2002

திருமதி மீனாம்பிகை சின்னத்துரை

பண்பின் சிகரமே!
பாசத்தின் உறைவிடமே!
ஆயிரம் ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் அம்மா என
அழைக்க நீங்கள் இல்லையே?

- குடும்பத்தினர்.

*நிரந்தர முகவரி:*
*'அம்பிகை வாசா',*
*ஆஸ்பத்திரி முன்*
*சாவகச்சேரி.*

*தற்காலிக முகவரி:*
*முத்துமாரி அம்மன் கோவில் முன்*
*நாவலர் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*
(20776) (31-13-16)

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்



இன்று (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை
பிறந்த நாள் காணும்
**திரு. எஸ்.மூர்த்தி**
அவர்களை பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

*யாழ்ப்பாணம்.* (20761) (29-13-16-31) - **பிள்ளைகள்.**

## பதவி ஏற்பு விழா

யாழ்நகர்மைய றோட்டறக்ட் கழகத்தின் Rtr.J.நாமனி தலைமையிலான 11ஆவது நிர்வாகசபை பதவியேற்பு மற்றும் நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் Rtr N.வைகவேனி தலைமையிலான 3ஆவது நிர்வாகசபை பதவியேற்பு விழாக்கள் நடை பெறவுள்ளன.

பிரதம விருந்தினர்: **Rtn. K.சுரேந்திரன்**
(தலைவர், யாழ். றோட்டறிக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: **DRR Rtr.PP.றுஷ்டிஜெகான்**
(மாவட்ட றோட்டறக்ட் பிரதிநிதி)
இடம்: செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்,
16/2, சீனியர் வீதி, கலட்டி.
காலம்: 27-07-2003 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மு.ப. 11.00 (பு.நே.)

★ *அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்* ★

Rtr.PP.A.செல்வேள்றடாஸ்
செயற்திட்ட இயக்குநர்.

யாழ்.நகர்மையறோட்டறக்ட் கழகம் — நல்லூர் றோட்டறக்ட் கழகம்.

(C29164) (32-16-17)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசலட்சுமி சோமசுந்தரம்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சோமசுந்தரம் அவர்கள் நேற்று (26.07.2003) சனிக்கிழமை மாலை சிவபதமடைந்தார்.

இவர் அமரர் திரு.திருமதி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் அமரர் Dr.சரவணமுத்து சோமசுந்தரத்தின் (மனப்புலி) அன்பு மனைவியும் திரு.திருமதி Dr.சரவணமுத்து தம்பதிகளின் பாசமிகு மருமகளும் சீதாலட்சுமி, Dr.சுந்தர்ராஜன், சிறினிவாசன் (யாழ். பல்கலைக்கழகம்), Dr.ஜானகி (யாழ். மா.சபை.சித்தமருத்துவம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாவின் வளர்ப்புத் தாயும் அமரர் நாகரத்தினம் மற்றும் வடிவாம்பிகை, ஜெயலட்சுமி (பொது நூலகர், கொக்குவில்), குகநாதன் ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் அமரர் கைலாசபிள்ளை (சேமன்), அமரர் கனகரத்தினம் (இளைப்பாறிய அதிபர்), அமரர் நாகலட்சுமி, பசுபதிச்செட்டியார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் S.R.ரட்ணராஜா மற்றும் தில்லைராஜேஸ்வரி, Dr.ஞானசம்மந்தர்., அமரர் சாயுச்சியம் மற்றும் தில்லைநாயகி, Dr. பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனியும் அமுதினி, டுசியந்தன், யசோதினி, தர்சினி, Leo ரமணன் (யாழ்.பல்கலைக்கழகம்), தனா, ராதாகிஸ்ணன், கல்பனா, சஞ்சிதா, சோம ஸ்ரீஜெயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Lion Dr.சுந்தர்ராஜன்
நவாலி - கிருஷ்ணா கிளினிக்
சிறினிவாசன் (மகன்).

*இல.2, செட்டித்தெரு,*
*நல்லூர்.*

(20785) (29-13-18-31)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை27

இருபாலை தெற்கு, ஆனந்தபுரம் கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அ.பவளன் தலைமையில் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்ட இணைப்பாளர் சி.ரஞ்சன் பாபு கலந்துகொள்ளவுள்ளார்.

(ம-10-180)

★ ★ ★

சங்கானை, ஜூலை27

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அதிபர் வே.சிவானந்தம் தலைமையில் பாடசாலை முன்றிலில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் சங்கானை கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.செல்லையா தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகவும், பழைய மாணவர் செ.நாகேந்திரன் தம்பதிகள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(எ-29)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை27

யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 9 மணி முதல் திக்கமுனையில் உள்ள கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

☆ அச்சுவேலி ஸ்ரீ விக்னேஸ்வரா வி.க. அணி எதிர் ஆவரங்கால் நவோதய வி.க. அணி.

☆ கெருடாவில் அண்ணா வி.க. அணி எதிர் கோப்பாய் ஐக்கிய வி.க. அணி.

☆ ஆவரங்கால் மத்தி வி.க. அணி எதிர் நாயன்மார்கட்டு பாரதி வி.க. 'ஏ' அணி.

☆ புத்தூர் கலைமதி வி.க. 'பி' அணி எதிர் மூன்றாவது ஆட்டத்தில் வெற்றியீட்டும் அணி.

(ம-10)

### ஒரே ஈற்றில் இரண்டு நாகு கன்றுகள்

தென்மராட்சி, ஜூலை27

சாவகச்சேரி பெரிய அரசடியில் உள்ள கனகரத்தினம் முகுந்தன் என்பவரின் பசு ஒரே ஈற்றில் இரண்டு நாகு கன்றுகளை ஈன்றுள்ளது.

பசு மாடு ஒன்று ஒரே தடவையில் இரு நாகு கன்றுகளை பிரசவிப்பது அபூர்வமெனவும், இப்பசுக்கன்றுகளுக்கு கோமாதா வழிபாட்டு தினங்களில் பூசை செய்தால் நாட்டில் நன்மை பிறக்குமென இந்து மத குருமார்கள் தெரிவித்தனர்.

(ம-117)

## வண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் ஆடிப்பூர அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

உபயகாரர்கள் தங்கள் உபயங்களை காரியாலயத்தில் உறுதிப்படுத்தவும். உபயகாரரின் விவரங்கள் கிடைக்காததால் நேரில் அறிவிக்க முடியவில்லை என்பதனை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

திருமதி ச.நாகராஜ ஐயர்
பரம்பரை முகாமை தர்மகர்த்தா
பிள்ளைகளுக்காக.

(20784)(29-13-16-31)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகரத்தினம் செல்வராணி

மானிப்பாய் மேற்கைச் சேர்ந்த திருமதி கனகரத்தினம் செல்வராணி அவர்கள் 25.07.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அரசரத்தினம் கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான அரசரட்ணம் கனகம்மா அவர்களின் அன்பு மருமகளும் சுகந்தன் (இந்தியா), அழகேசன் (தரம்8 மாணவன், மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி (டென்மார்க்), செல்வராசா (நெல்லியடி), கமலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி நவமணிதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற நவரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அம்பி (ஜேர்மனி), கலா (பிரான்ஸ்), மலர் (பிரான்ஸ்), சிவராஜா (ராஜன் - கொழும்பு), பவானி (ஜேர்மனி), செல்வி (கொழும்பு), ராஜி (லண்டன்), செல்வக்குமார் (டென்மார்க்), ஈசு (நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செல்வக்கிருபாகரன் (டென்மார்க்), கருணாகரன் (டென்மார்க்), திருமகள் (பிரான்ஸ்), மனோகரன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), கலா (டென்மார்க்), றஞ்சிதமலர் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு மானிப்பாய் மேற்கு அருளம்பலம் இந்திரன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகரத்தினம் (கணவர்),
அ.இந்திரன் (மானிப்பாய்),
க.சிறி (லண்டன்).

*மானிப்பாய் மேற்கு,*
*மானிப்பாய்.*

(20782) (29-16-17)

### குமாரு கந்தையா
**(ஓய்வுபெற்ற புகையிரத சீட்டுப் பரிசோதகர்)**

அம்பனை, சுன்னாகம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரு கந்தையா அவர்கள் 25.07.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரு - சேது தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற தங்கம்மா அவர்களின் அன்புக் கணவரும் சின்னம்மா, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தருமலிங்கம் (கனடா), மனோரஞ்சிதமலர் (இலங்கை), மனோரஞ்சலிங்கம் (லண்டன்), பூபாலகிருஷ்ணலிங்கம் (ஜேர்மனி), சற்குணேஸ்வரன் (U.S.A.) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மு.நடராஜா (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சிவகௌரிதேவி (கனடா), எலிசபேத் (லண்டன்), மங்களா (ஜேர்மனி), றாதிகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கர்ஜினி (யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடம், முதலாம் வருடம்), றஜீவ் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கஜீவ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), சுஜானி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஜனேஸ், ஜனிபர் (லண்டன்), சுடரங்கி (ஜேர்மனி), பானு (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் நாகம்மா (பிரான்ஸ்), தேவி (கொழும்பு), செல்லம்மா (கிளை முகாமையாளர்-கைதடி) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.நடராஜா,
(மருமகன் - உடற்கல்வி ஆசிரியர்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

*அம்பனை,*
*சுன்னாகம் மேற்கு,*
***T.P.0777 074225.***
(சி29166) (31-13-16)


**லஷ்சுமி சினிமா** இணுவில்
சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த
**பாறை**
காட்சி நேரம்: 11.00,3.00,7.00 (பு.நே.)
(C28976) (31-13-16)

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜூன், கிரண், கவுண்டமணி நடித்த
**பரசுராம்** (பிலிம்)
தினசரி காட்சி : 11.00, 3.00, (பு.நே.)
இரவு: 7.00 (பு.நே.)
(C28767) (31-13-16)

**நிஹார்ஞ்சனாகம்**
விக்ரம், பிரியங்கா நடித்த
**காதல் சடுகுடு** (பிலிம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
**THE MUMMY**
தினசரி 8.45 இரவு
(31-13-18)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
**பிரியமான தோழி** (பிலிம்)
தினசரி: 10.30, 2.30, 6.30, 9.30.
(C28821) (31-13-16)


**வீகேட்டி** அச்சுவேலி
விஜய் மற்றும் பிரியங்கா சோப்ரா நடித்த
**தமிழன்** (பிலிம்)


தினசரி காட்சிகள்
3.00, 7.00 (பு.நே.)
காலை 11.00 மணிக்கு **THE WORLD IS NOT ENOUGH** (பிலிம்)
(C28088) (31-13-16) (007 ஜேம்ஸ் பாண்ட்).

**TILKO HOLIDAYS**

யாழ்நகரின் மத்தியில் நல்லூர் கந்தன்
அருள் பெற
வெளிநாடுகளில் இருந்து வரும்
அடியார்களை அழைக்கின்றது
TILKO HOLIDAYS இன்
MODERN GUEST HOUSES

TILKO Holidays






* Accommodation with A/C, hot water and modern facilities
* In house business Centre
* Clean and delicious food
* Transport Facilities.

Jaffna
305, Main Street,
42/7, Kandappasekaram Road,
114, Kandy Road,
021-222 5969, 0777-575958, 0777-710919, 0776-002621

COLOMBO
++94 74614447

LONDON
++44 208 4720029

(சி-29163) (31-13-16-17)

# திருமலை ஹர்த்தாலால் நகரம் நேற்று செயலிழந்தது

திருகோணமலை,ஜுலை27

திருகோணமலையில் நேற்று இடம் பெற்ற ஹர்த்தால் காரணமாக நகரம் முழுமையாக ஸ்தம்பித்தது.

கடைகள், சந்தைகள் மூடப்பட்டிருந்தன. சில சிங்கள வர்த்தகர்களின் கடைகள் மட்டும் திறந்திருந்தன. வாகன நடமாட்டம் குறைவாக இருந்தது.

நாளையதினம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த ஹர்த்தால் ரத்துச்செய்யப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக படைத்தரப்பு மற்றும் பொலீஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றிவளைப்பு தேடுதல்கள், மோட்டார் சைக்கிள் படையினரின் அடாவடித்தனங்கள் என்பனவற்றைக் கண்டித்தும் -

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 18 மாதங்கள் கடந்தும் அதில் குறிப்பிடப்பட்ட அம்சங்கள் நிறைவேற்றப்படாததற்கு அதிருப்தி தெரிவித்தும் -

ஜுலை கலவரத்தின்போது இடம் பெற்ற கொடுமைகளை நினைவு கூர்ந்தும் -

குரங்குபாஞ்சான் முகாம் விவகாரத்தில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழு நடுநிலையான தீர்ப்பை வழங்கத்தவறியதை ஆட்சேபித்தும் -

இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (ம-3)

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும் நடமாடும் சேவையில் வழங்கப்பட இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடமாடும் சேவைக்காக திருமலை செயலகத்துக்கு வந்திருந்த 200இற்கும் மேற்பட்டவர்களில் அதிகளவானோர் சிங்களவர்கள் என்றும் தெரிவிக் கப்பட்டது.

செயலகத்துக்கு வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், கே.துரைரட்ணசிங்கம் ஆகியோர் "விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி சமஅளவில் காணிகள் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று அங்கு கூடியிருந்த தமிழ், முஸ்லிம் மக்களிடம் தெரிவித்தனர்.

அதேசமயம் -

ரத்துச் செய்யப்பட்ட காணி அமைச்சரின் விஜயம் விரைவில் இடம்பெறும் என்று திருமலை அரச அதிபர் தெரிவித்தார். (ம-3)

## வெஸ்பேர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருமான ஜோன் வெஸ்பேர்க் முற்றாக நிராகரித்துள்ளார்.

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்தப் பிரேரணைகளை கையளிப்பதற்கு முன்னர் அவற்றை நான் விரிவாக ஆராய்ந்துள்ளேன். நான் கையளித்த பிரேரணைகள் வார இறுதி செய்திப் பத்திரிகை ஒன்றிலும் வெளியாகியுள்ளன. இவற்றைத் தவிர வேறு பிரேரணைகள் எவையும் இல்லை" - என்று வெஸ்பேர்க் தெரிவித்தார்.

இதேவேளை -

அரசு சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக வரைவை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டு விரைவில் பேச்சுக்களுக்கு திரும்புவார்கள் என்று 'கொழும்பு பேஜ்' இணையத்தளம் தெரிவித்தது. (ம-9)


**CHUNDIKULI GIRLS' COLLEGE**
**JAFFNA**
**ANNUAL PRIZE GIVING -2003**

Saturday-02 nd August,2003
at 10.00 a.m.

Chief Guests

**Rt.Revd. Duleep de Chickera**
Bishop of Colombo-Church of Ceylon
and
**Mrs. Geetha de Chickera**

Chairman
**Ven.S.P.Nesakumar**
Archdeacon-Jaffna
*Parents, Old Girls & Well Wlshers are Cordially invited*

(C-29151) **Principal, Staff & Students.**


## சரணடைந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 11 மணியளவில் பொதுமக்களின் உதவியுடன் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை சாவகச்சேரி அலுவலகத்தில் சரணடைந்துள்ளார்.

அங்கிருந்து புலிகளின் அரசியல் துறை யாழ்மாவட்ட அலுவலகத்துக்கு அவர் அனுப்பிவைக்கப்பட்டார்.

நேற்றுக் காலை 10மணியளவில் அரசியல்துறையினரால் இந்தச் சிப்பாய் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார். இந்தக் கையளிப்பு நிகழ்வில் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி. சந்திரசேகராவும் கலந்துகொண்டார்.

"கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தில் இணைந்த நான் கிளாலி கடற்படை முகாமில் பயிற்சி பெற்று வந்தேன்"

"அங்கு கடுமையான வேலை காரணமாகவும் இராணுவ அதிகாரிகள் அடித்துத் துன்புறுத்தியமை காரணமாகவும் தப்பி ஓடி வந்தேன். என்னை எனது வீட்டில் கொண்டு சென்று விட்டு விடுங்கள்" - என்று புலிகளிடம் கேட்டுள்ளார். (ம-8)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளிடம் கண்காணிப்புக குழு முன்னர் கேட்டிருந்தது. ஆனால், இதுபற்றி ஆராய்ந்த புலிகளின் தலைமை முகாமை அகற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டது.

இது ஒரு யுத்தநிறுத்த மீறல் என்று கூறியிருந்த கண்காணிப்புக் குழு தற்போது அந்த முடிவைப் மீள் பரிசீலனை செய்யுமாறு புலிகளின தலைமையிடம் வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக நோர்வேயின் விசேட பிரதிநிதி ஒருவர் விரைவில் வன்னிக்கு விஜயம் செய்ய உள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் அல்லது பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் பிரபாகரனைச் சந்திக்கலாம் என அந்த செய்தி மேலும் தெரிவித்தது. (ம-3)


BEACON
**A/L 2004**
**Day Class**
Acc.- திரு. பாலவாசன்
Eco.- திரு. மோகன்
B.st.- திரு. யசோ
Log.- திரு. மனோகரன்
ஆரம்பம்:
28.07.2003
Mon. 10a.m.
யாழ்.
(20758)(12)


# மேலும் 2 ஈ.பி.டி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிமலராஜன் கொலை வழக்கு விசாரணை யாழ்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் இடம்பெற்றது. அச்சமயம் விசேட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்த ரஞ்சித் டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

★ இந்தக் கொலைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கூறப்படும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவரைத் தேடிவருகின்றோம். அவர்கள் இருவரும் தமது அமைப்பில் இருந்து விலகிவிட்டனர் என்று ஈ.பி.டி.பி. கூறுகின்றது. இருவரும் புத்தளம் அல்லது மன்னாரில் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. அவர்களை விரைவில் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்வோம்.

★ ஈ.பி.டி.பி. அமைப்பினால் இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்ட ஆயுதங்களில் இருந்து இந்த வழக்கு விசாரணைக்காகப் பெறப்பட்ட 9மி.மீ. கைத்துப்பாக்கிகள் இரண்டும் இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

சம்பவ இடத்தில் மீட்கப்பட்ட சன்னங்கள் பிரஸ்தாப துப்பாக்கிகளில் இருந்து வெளியேறவில்லை என பகுப்பாய்வாளர்கள் அறிக்கை தந்துள்ளனர். எனவே, அத்துப்பாக்கிகளை மீண்டும் இராணுவத் தளபதியிடம் கையளிக்க நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் - இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கையை ஆராய்நத நீதிவான் பிரஸ்தாப துப்பாக்கிகளை இராணுவத் தளபதியிட்ம மீளக்கையளிக்க அனுமதி வழங்கினார்.

படுகொலை தொடர்பாக மீட்கப்பட்டுள்ள மற்றொரு துப்பாக்கியை யாழ்.தலைமையகப் பொலீஸ் பொறுப்பதிகாரியின் பாதுகாப்பில் வைக்கும்படியும் இக்கொலை தொடர்பாக மீட்கப்பட்ட சான்றுப்பொருள்களை நீதிமன்றப் பதிவாளரின் பாதுகாப்பில் வைக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

நிமலராஜன் கொலை வழக்குத் தொடர்பாக ஏற்கனவே ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பாலா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பு இடம்பெறும் இடம் தொடர்பாக ஆலோசனைகள் நோர்வேத் தரப்புக்கு விடுதலைப் புலிகளினால் வழங்கப்பட்டுள்ளதாகவும்-

அது தொடர்பாக நோர்வேத் தரப்பு ஆராய்ந்து வருவதாகவும் - கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. பெரும்பாலும் இந்தச் சந்திப்பு சுவீடனில் இடம்பெறும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பை அடுத்து அடுத்த மாதம் நடுப்பகுதியில் புலிகளின் பதில், நோர்வேத் தரப்பு ஊடாக அரசுக்கு தெரியப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-3)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் மாணவர் பிரதிநிதிகளுக்கு விளக்கினர்.

இது தொடர்பாக ஆராய்ந்து சித்த மருத்துவத்துறையை பீடமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கென 7 பேர் கொண்ட முகாமைக் குழு ஒன்று பேரவையால் தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்று மாணவர் பிரதிநிதிகளுக்குக் கூறப்பட்டது.

இந்த உறுதிமொழிகளை அடுத்து மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு கதவுகளைத் திறந்துவிட்டனர்.

எனினும், எழுத்துவடிவில் இந்த உறுதிமொழி தமக்கு வழங்கப்படும் வரை தாம் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கப்போவதாக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.(ம-3-4)


**தென்னிந்தியாவில் இருந்து**

யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி 2ஆவது முறையாக வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்



**ராஜகுருசாமி**
அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
**கைரேகை மட்டும் 9 மணிமுதல் 2 மணிவரை.**
இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
காலை 9.00மணிமுதல் மாலை 6.00மணி வரை.

(24-15-19) ராஜகுருசாமி T.P. 5867
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
**60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA.**
(20303)



**இந்திய சாஸ்திரியார் வருகை**



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு
வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
**'S.N.குமாரசாமி'**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)

**ஸ்ரான்லி லொட்ஜ்**
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(28-14-16) (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (20411)





## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபை செங்கமலம்

திருமதி கனகசபை செங்கமலம் அவர்கள் நேற்று (26.07.2003) சனிக்கிழமை மாலை 4மணியளவில் காலமானார்.

அன்னார் கமலேந்திரன் (கரவெட்டி, தெ.ப.உ.கூ.சங்கம்), திருமதி ச.கமலகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகநாதன், திருமதி க.கீதாமணி (ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும் கவிதா, சதீஸ், சர்மிளா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கமலதாரகை வதிரி.*

தகவல்:
க.கமலேந்திரன் (மகன்).

(C/29165) (29-16-17-31)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.